பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 07 வெள்ளிக்கிழமை 23.11.2018 கதிர் 18

இனி இது ரகசியம் அல்ல!

மஹிந்த ராஜபக்ஷவை அரசியல் அத்திபாரத்துடன் பெயர்த்து விழ்த்தி விட்டு ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றியவர் மைத்திரிபால சிறிசேன.

அண்மைக் காலம் வரை பரம அரசியல் எதிரிகளாக மோதிக் கொண்டவர்கள். இருவரும் சுட்ட மண், இனி ஒட்ட பக்கம் 02

# இப்போது வேண்டாம் தேர்தல் 2020 ஆம் ஆண்டு நடத்துவோம்

## ஜனாதிபதியிடம் கோருகிறார் எஸ்.பி.



கொழும்பு, நவ. 23

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை மஹிந்த ராஜபக்ஷவுக்கே இருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மை இருப்பதாக தெரிவித்தாலும் இதுவரை அவர்கள் காட்டவில்லை. அதனால் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் நிலைப்பாட்டை நீக்கிக்கொள்ளுமாறு ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றோம். 2020ஆம் ஆண்டே நாடாளுமன்றத் தேர்தலொன்றுக்குச் செல்வோம்.
- இவ்வாறு அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். பக்கம் 11

## மனம் மாறினார் பௌசி மீண்டும் மஹிந்தவுடன்



கொழும்பு, நவ. 23

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கப்போகிறார் என பக்கம் 11

## நாட்டு மக்களின் நலனை சீர்குலைக்கிறார் மைத்திரி

### சாடுகின்றார் சமந்தா பவர்



கொழும்பு, நவ. 23

நாட்டின் ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பக்கம் 11

## போதிய அறிவின்றி கருத்து கூறாதீர்கள்

### தனது தரப்புக்கு ரணில் பணிப்பு

கொழும்பு, நவ. 23

நீதிமன்ற விசாரணைகள் குறித்துப் போதிய அறிவின்றிக் கருத்து வெளியிடுவதைத் தவிர்க்குமாறு பக்கம் 11

## நாடாளுமன்றக் கலைப்பு அறிவிப்பை வாபஸ் பெறவுள்ளார் மைத்திரிபால?



கொழும்பு, நவ. 23

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்காகத் தன்னால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார் என அறியமுடிகின்றது.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்காக ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்த பக்கம் 11

## விவசாய வரிகளை அகற்ற நடவடிக்கை

### மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, நவ. 23

விவசாய நடவடிக்கைகளின் மூலம் கிடைக்கும்வருமானங்களுக்கானவரியை நீக்க இந்த வாரத்தினுள் நடவடிக்கை எடுக்கப்படும் என பக்கம் 11

## ஜனாதிபதித் தேர்தலை நடத்த மைத்திரி தயாரா?

### மனோ கணேசன் சவால்



கொழும்பு, நவ. 23

மக்களிடம் சென்று வாக்கு கோரி, ஒக்ரோபர் 26 இற்கு பிறகு தான் மேற்கொண்ட நடவடிக்கைகள் சரியானவையா, அவற்றுக்கு பக்கம் 11

## இந்திய, அமெரிக்கத் தூதுவர்கள் பாதுகாப்புச் செயலருடன் பேச்சு



கொழும்பு, நவ. 23

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரும், இந்திய துணைத் தூதுவரும் உயர்மட்ட அதிகாரிகளுடன் இணைந்து, இலங்கையின் பாது பக்கம் 11

## ஐ.தே.கவினரை விட எமக்கே பலம் அதிகம்

### கூறுகிறார் சமரசிங்க

கொழும்பு, நவ. 23

நாடாளுமன்றத்தில் எமக்கே பெரும்பான்மையுள்ளது. இந்நிலையில் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆதரவளிப்பதையெல்லாம் இதற்கு அப்பாற்பட்ட விடயம் என மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். பக்கம் 02

## ரணில் பிரதமராவதே நெருக்கடிக்குத் தீர்வு

### ஜெனிவாவில் பாக்கியசோதி எடுத்துரைப்பு



ஜெனீவா, நவ. 23

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக கொண்ட அரசை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதே இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு என ஜெனிவாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பக்கம் 11

## அளவுக்கதிக தன்னம்பிக்கை கொண்டிருந்தார் பிரபாகரன்

### கூறுகிறார் ஜப்பான் விசேட தூதுவர் அகாசி



கொழும்பு, நவ. 23

விடுதலைப் புலிகளின் தலைவர்பிரபாகரன்அளவுக்கு அதிகமான தன்னம்பிக்கை கொண்டிருந்தார் என ஜப்பானிய அரசின் முன்னாள் விசேட பிரதி பக்கம் 11

## ரூ.1,000 சம்பளம் உறுதியெனில் 3 எம்.பிக்களை வளைப்பேன்

### மஹிந்தவிடம் தொண்டா சபதம்

கொழும்பு, நவ. 23

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தை எழுத்துமூலம் வழங்கினால் அல்லது பக்கம் 11

## நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு கூட்டமைப்பில் மாவை, சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், நவ. 23

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு தமது உறுப்பினர்களின் பெயர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகியன வழங்கியுள்ளன.

12 பேர் கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 7 பேரின் பெயர்களை முன்மொழிந்தது. பக்கம் 02

# மேல் மாகாண சபையின் கணினிகளில் ஆபாச இணையத்தளங்களுக்குத் தடை

கொழும்பு, நவ. 23

மேல் மாகாண சபை சபா மண்டபத்தில் உறுப்பினர்களின் தேவைக்காக அமைக்கப்பட்ட கணினிகளில் ஆபாச இணையத் தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களைப் பார்வையிட முடியாத வாறு தடை செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண சபையின் வரவு – செலவுத் திட்டம் கடந்த திங் கட்கிழமை சபையில் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், சில உறுப்பினர் கள் சபையில் இருந்த கணினியில் ஆபாசக் காட்சிகளைப் பார்வையிட்டனர்.

அது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப் பிரியவின் பணிப்புரையின் கீழ் சபா மண்டபத்தில் பொருத்தப்பட் டுள்ள கணினிகளில் ஆபாச இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களைத் தடை செய்துள்ளதாக மாகாணத்தின் பிரதம செயலாளர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண சபை உறுப்பினர்கள் குணசிறி ஜெயநாத், சுமித் சொய்சா மற்றும் கீர்த்தி காரியவசம் ஆகிய மூவரும் சபை அமர்வு இடம்பெற்றவேளை கணினியில் ஆபாச இணையத்தளத்தைப் பார்வையிட்டனர் என் பது காணொலி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இந்தியாவுக்கு பாக்குக் கடத்தல்: சனத் ஜயசூரிய மீது குற்றச்சாட்டு



பழுதடைந்த பாக்குகளைக் கடத்தினார் என முன்னாள் இலங்கை அணிதலைவர் சனத் ஜெயசூரிய மீது இந்தியப் பொலி ஸார் குற்றச்சாட்டுகளைச் சுமத் தியுள்ளனர்.

இது தொடர்பில் இந்திய ஊட கங்களில் வெளியாகிய செய்தி யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தியாவின் நாக்பூரில் பல மில்லியன் ரூபா பெறுமதியான பழுதடைந்த பாக்குகளை இந் திய அதிகாரிகள் கைப்பற்றினர். அவற்றுக்கும் சனத் ஜயசூரிய வுக்கும் தொடர்பிருப்பது இந் திய அதிகாரிகளின் விசாரணை யில் தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து மும்பாய் பொலிஸாருக்கு சனத் ஜெயசூரிய அழைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் தொடர்பான கடிதமொன்றை இந்திய அதி காரிகள் இலங்கை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அத்துடன் இலங்கைக் கிரிக் கெட் வீரர்கள் இருவர் வரும் டிசெம்பர் 2ஆம் திகதி விசாரணைக் காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தோனேசியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு செல் லப்பட்ட பாக்கு இந்தியாவுக்குக் கடத்தப்பட்டுள்ளது என இந்திய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பாக்கு கடத்தல் நடவடிக்கை களில் ஈடுபடுவதற்காக இலங்கை யில் போலி நிறுவனங்கள் உரு வாக்கப்பட்டுள்ளன.

இலங்கை வீரர்கள் தங்கள் அரசில் தங்களுக்கு உள்ள செல்வாக்கை பயன்படுத்தி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுப் போலி நிறுவனங்களை உரு வாக்கியுள்ளனர் என்பது விசார ணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தோனேசியாவிலிருந்து நேரடியாகப் பாக்குகள் இறக்கு மதி செய்யப்பட்டால் அவற்றுக்கு 108 வீதவரியைச் செலுத்தவேண் டும். ஆனால் தென்னாசியா சுதந் திர வர்த்தக உடன்படிக்கை யின் கீழ் இலங்கையிலிருந்து இறக்கு மதி செய்யப்பட்டால் அதற்கு வரியில்லை என இந்திய அதி காரி மேலும் தெரிவித்தார். (ஐ)

# ஊடகவியலாளர்களுக்கு மட்டும் இன்றைய அமர்வில் அனுமதி



நாடாளுமன்றத்தின் இன்றைய அமர்வின் போது பொது மக்கள் பார்வையாளர்கள் பகுதியும், தூதுவர்களுக்கான பகுதியும் மூடப் படும் என நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட பதற்ற நிலைமை காரணமாக கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை பொது மக்கள் பார்வை பகுதியை மூடிவிடுவதாக பிரதி சபாநாயகர் தெரிவித்திருந்தார். ஊடகவியலாளர் கள் மட்டும் அனுமதிக்கப்படவுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது இன்று 23 ஆம் திகதி வரை சபை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# மஹிந்த, மைத்திரி, ரணில் மூவரையும் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விளக்கம்

“மஹிந்த, ரணில், மைத்திரி தமிழர்களால் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள்!”

“நிராகரிக்கப்பட வேண்டிய வர்களில் ஒருவரைக் காப்பாற்றி அரசாங்கத்தின் அங்கமாக செயற் பட்டுக் கொண்டிருக்கிறவர்கள் எங்கள் மீது முன்வைக்கும் விமர் சனங்கள் குறித்து மக்கள் தெளி வாக இருக்க வேண்டும்” – என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்–

கூட்டமைப்பு நாடாளுமன்றில் நடுநிலை வகிக்கவேண்டும் எனக் கேட்பது மஹிந்தவுக்கு ஆதர வான நிலைப்பாடாக ஒருபோதும் அமையாது. நாடாளுமன்றில் இன்று ஐ.தே.கட்சி 105 ஆசனங் கள் வைத்திருக்கின்றது. அதேபோல் பொதுஜன பெரமுன 96 ஆச னங்களை வைத்திருக்கின்றது.

ஆக மொத்தத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதர வளிக்காவிட்டாலும் கூட ஐ.தே. கட்சி அதிகபடியான ஆசனங் களை வைத்திருக்கின்றது.

இந்நிலையில், கூட்டமைப்பு விழுந்தடித்துக் கொண்டு ஆதரவு வழங்குவது ஏதோ மஹிந்த பெரும்பான்மையைப் பெற்று விடப்போகிறார், ஆகவே ஜனநாய கத்தை காப்பாற்றுவதற்காக ஐ.தே. கட்சிக்கு ஆதரவளிப்பதாக கூட்டமைப்பு காட்ட நினைக்கிறது.

மஹிந்த, ரணில், மைத்திரி ஆகிய 3 பேரும் தமிழர்களால் நிராகரிக்கப்படவேண்டியவர்கள். அப்படி நிராகரிக்கப்படவேண் டியவர்களில் ஒருவருக்கு ஆதர வளிப்பதுடன், அவரைக் காப் பாற்றி அரசாங்கத்தின் அங்க மாக செயற்பட்டுக் கொண்டிருக்கிற வர்கள் எங்கள் மீது முன்வைக்கும் விமர்சனங்கள் குறித்து மக்கள் தெளிவாக இருக்கவேண்டும்.

கூட்டமைப்பு ஐ.தே.கட்சிக்காக இருக்கலாம், மஹிந்த தரப்புக் காக இருக்கலாம் நிபந்தனை களை விதிப்பதையும், அந்த நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரவளிப்பதையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

காரணம் தமக்கு நெருக்கடி உண்டாகும் காலங்களில் இவர் கள் நாங்கள் கேட்கும் எல்லாவற் றையும் ஏற்றுக் கொள்வார்கள். வாக்குறுதிகளை அள்ளி வீசுவார் கள்.

இது கடந்த 70 வருடகால வரலாறு. அந்த வரலாற்றை தெரிந்து கொண்டே நாங்கள் திரும்பவும் நிபந்தனைகளை விதிப்பது படு முட்டாள்தனமான செயலாகும் – என்றும் குறிப் பிட்டுள்ளார்.

இதேவேளை, எல்லாவற்றை யும் செயலில் கண்டதன் பின் எங்களுடைய ஆதரவை தெரி விக்கவேண்டும் என்றும் மேலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடமேயில்லை என்றுதான் மக் கள் நம்பிக் கொண்டிருந்தனர்.

ஆனால் அதிசயம் நிகழ்ந்த மாதிரி இருவரும் ஓரணியில் திடீரென ஒன்றாக வந்தனர். இலங்கையின் அரசியல் நிலை வரமே தலைகீழாக மாறிப் போனது.

ஆனால், இப்போது ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன தரப்புக்கும் பிரதமர் மஹிந்த தரப்புக்கும் இடையில் ‘லடாய்’ ஆரம்பித்து விட்டது என தென் னிலங்கையில் பரபரப்பாகச் செய்திகள் அடிபடத் தொடங்கி யுள்ளன.

தமக்கு உறுதியளித்தபடி நாடாளுமன்றப் பெரும்பான்மை யைப் பெற்றுத் தருவதற்கு பஸில் ராஜபக்ஷ தரப்பு தவற விட்டது என்றும், அதனால் ஜனாதி பதி சிறிசேன அதிருப்தி அடைந் திருக்கின்றார் என்றும், அதன் விளைவாகவே நல்லுறவு சீர்கெட்டிருக்கின்றது என்றும் சில தரப்புகளால் கூறப்பட்டது.

இது என்ன புது விடயம் என்று சற்றுத் தேடிப்பார்த்தேன்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசு பதவியேற்ற பின்னர் ‘ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ்’ நிறுவனத்துக்கு மஹிந்த ஆதரவாளர் ஒருவர் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். ஓரிரு தினங்களில் அவருக்குக் கல்தா கொடுத்தார் ஜனாதிபதி.

இதேபோல இலங்கை காப் புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு நாலக கொடகேயும், லங்கா ஹொஸ்பிட்டல் நிறுவனத்துக்கு லக்ஷ்மன் ஹுலுகல்லவும் தலை வராக நியமிக்கப்பட்டுள்ளனர். அந்த இருவருக்கும் அடுத்த தினங் களில் கல்தா கொடுக்க ஜனா திபதி தரப்புத் தயாராகிவிட்டது.

அதேசமயம் இதேபோன்ற நிறுவனங்களுக்கு யாரை நியமிப்பதானாலும் தன்னிடம் முன் அனும தியைப் பெற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி யினால் புதிய சுற்றறிக்கை ஒன்று அனுப்பட்டுள்ளமையும் அம் பலத்துக்கு வந்துள்ளது.

மேற்படி மூன்று நியமனங் களும் ஜனாதிபதிக்குத் தெரியா மல் பஸிலின் ராஜபக்ஷவின் சிபாரி சுக்கு அமைய முன்னெ டுக்கப்பட்டவை என்றும் –

அத்தகைய அத்துமீறல் போக்கு ஜனாதிபதி மிகுந்த எரிச்சலைத் தந்துள்ளமையால் இனிமேல் தமது அனுமதியின்றி இத்தகைய நியமனங்களை வழங்கவே கூடாது என இப்போது ஜனாதிபதி அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பியிருக்கின் றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து ஊடுருவி விசாரித்த போது அப்படி பிளவு நிலை ஏதும் இல்லை என்பதை உறுதி செய்ய முடிந்தது.

புதிதாகப் பிரதமர் பதவியை மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டமையை அடுத்து, அவ ரது ஆதரவாளர்கள் பல்வேறு நிய மனங்கள் மற்றும் விடயங் களுக்காக அவரை நெருக்கி வருகின்றார்களாம்.

இந்த ஆதரவாளர்களைச் சமாளிக்க, எல்லா அரசியல் விடயங்களையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே கையாள்கின்றார், எடுக்கின்றார், நானல்லன் என்று காரணம் கூறவும் தயாராகி விட்டார் மஹிந்தர்.

அதற்காகவே தமக்கு மிக நெருக்கமான முக்கிய நபர்கள் தவிர்ந்த ஏனையோரிடம் அரசில் தமக்கு அதிகாரமில்லை என்றும், எல்லா முடிவுகளையும் ஜனாதி பதியே எடுக்கின்றார் என்றும் தமது கையைவிரித்து வருகிறார் மஹிந்தர்.

அதனையே மைத்திரி – மஹிந்தர் பிணக்கு என்று பல தரப்பிலும் பேசுகின்றார்கள். அமைச்சுப் பதவிகளில் இருந்து பல்வேறு நியமனங்கள் வரை பலவற்றையும் கோரி தமது ஆதரவாளர்கள் தொல்லை கொடுத்து வருவதால் அவற்றில் இருந்து தப்பிக்க ஜனாதிபதியுடன் முரண்பாடு என்ற கயிறை மக் கள் மத்தியில் அவிழ்த்து விட்டி ருக்கின்றது மஹிந்த தரப்பு.

- மின்னல் -

## நாடாளுமன்றத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகி யன தலா 2 உறுப்பினர்களை முன்மொழிந்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற உறுப் பினர்கள் மாவை சேனாதிராசா, தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகி யோரின் பெயர்களை முன் மொழியப்பட்டுள்ளன.

ஜே.வி.பி. சார்பில் நாடாளு மன்ற உறுப்பினர்கள் விஜித ஹேரத், நலிந்த ஜெயதிஸ்ஸ ஆகிய இருவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த ஒக்ரோபர் 27ஆம் திகதி நாடாளுமன்றை ஒத்திவைத்தமையால் நாடாளு மன்றத் தெரிவுக்குழு உள்ளிட்ட குழுக்கள் கலைக்கப்பட்டிருந் தன. இந்த நிலையில் அவை மீளவும் புதிதாக நியமிக்கப்பட வுள்ளன. (ஐ)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பொன் றின் போதே அவர் இதனைக் குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

நாட்டின் தற்போதைய அரசி யல் நிலைமையில் ஐக்கிய தேசி யக் கட்சிக்கு 101 உறுப்பினர்கள் மட்டும் தான் இருக்கிறார்கள். எமக்கு 103 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆதரவளிப்பதையெல்லாம் அப்பாற்பட்ட விடயமாகும். அவர் களுக்கு எமக்கு எதிராக பிரரே ணையொன்றை நிறைவேற்றிக் கொள்ளத்தான் 122 உறுப்பினர் களின் ஆதரவு இருக்கின்றதே ஒழிய, ஸ்திரமான கூட்டணி யொன்றை அமைக்க அல்ல. அத்தோடு அவர்கள் கூட்டணிக் கட்சிகளல்ல.

ஆனால், நாம் தனியானக் கூட்டணி எனும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியை விட பலமான நிலை யிலேயே இருக்கிறோம். இதன் காரணத்தினால் தான் நாடாளு மன்ற தெரிவுக்குழுவுக்கு நாம் 7 உறுப்பினர்களின் பெயரைப் பரிந்துரைத்துள்ளோம் – என் றார். (ஐ)

# இலங்கையின் ஜனநாயக மீறல் அமெரிக்க உறவைப் பாதிக்கும்!

## அமெரிக்க செனட்டர் மைத்திரிக்குக் கடிதம்

நியூயோர்க், நவ. 23

**இலங்கை அரசியல் களத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் ஜனநாயக மீறல் செயற்பாடுகள் அமெரிக்காவுடனான உறவில் தாக்கத்தை ஏற்படுத்துமென அமெரிக்க செனட்டர் கிறிஸ் வான் ஹொலென் எச்சரித்துள்ளார்.**

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, நேற்று முன் தினம் புதன்கிழமை தாம் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.**

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு :–

இலங்கையுடன் நட்புறவைப் பேணிவரும் நாடு என்ற வகையில், பதவியிலிருந்த பிரதமரை நீக்கியமை, புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமருக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை நிராகரித்தமை போன்றவை குறித்து அதிக கரிசனை கொண்டுள்ளோம். சட்டம் மற்றும் அரசமைப்பின் பிரகாரம், நம்பிக்கையில்லாப் பிரேரணையின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் ஜனநாயகத்தை கட்டியெழுப்புவதாக வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம், கடந்த 2015ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு வலுப்பெற்றுள்ளது. குறிப்பாக மில்லேனியம் சவால் மாநகராட்சித் திட்டத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்தியமை, பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரித்தமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான நிலையில் அண்மைய காலமாக இலங்கையின் ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் கேள்விக்குட்படுத்தும் வகையில்



இடம்பெற்ற செயற்பாடுகள் அமெரிக்காவுடனான உறவை பாதிக்கும்.

பதவியிலிருந்த பிரதமரை நீக்கியமை, நாடாளுமன்றைக் கலைத்தமை, தேர்தலை அறிவித்தமை மற்றும் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்கை நிராகரித்தமை போன்றவை இரு நாடுகளுக்கும் இடையில் கட்டியெழுப்பப்பட்ட உறவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளன.

இவற்றைக் கருத்திற்கொண்டு, அரசமைப்பு, ஜனநாயகம் மற்றும் சட்டத்தை மதித்து தற்போதைய ஸ்திரமற்ற நிலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்– என்றுள்ளது. (ஐ)

# ஜனாதிபதி கொலைச் சதி; முக்கிய தகவல் விரைவில்

## அமைச்சர் தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 23

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்வதற்கான சதித்திட்டம் தொடர்பான முக்கியத் தகவல்களை வெளியிடவுள்ளதாக அரச தரப்பு தெரிவித்துள்ளது.**

**விசாரணைகளின்போது முக்கிய சில தகவல்கள் கசிந்துள்ள நிலையில், அவை வெகு விரைவில் பகிரங்கப்படுத்தப்படும் என அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி உள்ளிட்ட சில முக்கிய பிரமுகர்களைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளையடுத்து பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி நாலக டி சில்வா கடந்த மாதம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

அத்துடன், இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக இந்தியப் பிரஜையொருவரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டார்.

நாலக சில்வாவுடனான தொலைபேசி உரையாடலொன்றையடுத்து ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கான சதித்திட்டத்தை ஊழலுக்கு எதிரான படையணியின் நடவடிக்கைப் பணிப்பாளர் நாமல் குமார ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# கிளிநொச்சியில் மாவீரர்களின் பெற்றோருக்குக் கௌரவிப்பு



கிளிநொச்சி, நவ. 23

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

ஐக்கிய இராச்சியத்தின் வீரத் தமிழர் முன்னணியின் ஏற்பாட்டில் அறம் செய் அறக்கட்டளையின் உதவியுடன் 'எமக்காக வாழ்ந்தவரை வாழவைப்போம்! எனும் தொனிப்பொருளில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, உயிர்நீத்த மாவீரர்களுக்கு சுடரேற்றி, மலர் தூவி உறவுகள் உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்டு உயிர்நீத்த மாவீரர்களின் பெற்றோருக்குத் தென்னங்கன்றுகளையும், ஆடைகளும் வழங்கினார். (ஐ)

# உரிய முறையில் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படும்

## நிதி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, நவ. 23

கடன் சேவை முறைக்குக் களங்கம் ஏற்படுத்தாத வரலாற்றைக் கொண்ட நாடு என்ற இலங்கை. இந்த உயர்வான நிலைப்பாட்டை தொடர்ந்தும் அரசு முன்னெடுத்துச் செல்லுமென்று நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு கூறியுள்ளது.

இது குறித்து நிதியமைச்சு வெளியிட்ட அறிக்கையில்–

இதற்கமைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் உரிய முறையில் திருப்பிச் செலுத்தப்படவிருக்கின்றன. இலங்கைக் குடியரசின் சகல கடன் வழங்குநர்களுக்கும் உரிய தினத்துக்கு முன்னர் கடன்கள் திருப்பிச்செலுத்தப்பட்டுள்ளன.

அடுத்த வருடம் செலுத்தவேண்டியிருக்கும் சர்வதேச இறைமை பிணை முறி தொடர்பான 1500 மில்லியன் டொலர்கள் பெறுமதி வாய்ந்த கடனும் திருப்பிச் செலுத்தப்படவுள்ளது.

இதற்குப் பொறுப்பான நிதி மத்திய வங்கியின் ஒதுக்கத்தில் காணப்படுகிறது. இதற்கென மத்திய வங்கி நெருக்கமான முறையில் செயற்பட்டு வருகிறது–என்றுள்ளது.(ஐ)

# புதிய நியமனங்கள் அனைத்தும் இரத்து

மறு அறிவித்தல் வரும் வரை அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்குப் புதிய நியமனங்களை வழங்கவேண்டாம் என ஜனாதிபதி செயலகம், அனைத்து அமைச்சுக்களுக்கும் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் நேற்று வியாழக்கிழமை விடுத்துள்ள விசேட சுற்றறிக்கையிலேயே இவ்விட யம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அரச திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் தலைர்கள் மற்றும் இயக்குநர்கள் சபைகளில் வெற்றிடங்கள் காணப்பட்டால் அதற்காக அமைச்சின் மேலதிக செயலர் அந்தஸ்தில் உள்ள ஒருவர் அல்லது ஓய்வு பெற்ற தகைமை உள்ள அரச அதிகாரி ஒருவர் அல்லது சிரேஷ்ட அதிகாரி ஒருவர் அரசியல் பின்புலம் எதுவும் இல்லாத வகையில் நியமிக்கப்படவேண்டும் என சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதமர் –அமைச்சரவை–பொதுநிர்வாக அமைச்சு நிதி அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்களுக்கும் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# போதைப்பொருள் கடத்தல்காரர் விமான நிலையத்தில் சிக்கினார்

கொழும்பு, நவ. 23

இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேகநபர் 35 இலட்சம் ரூபா பெறுமதியான 300 கிராம் ஐஸ் ரக போதைப் பொருளுடன் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் நேற்று முன் தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு, வெல்லம்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 52 வயதுடைய ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தேகநபர், இதற்கு முன்னர் கடந்த ஆண்டு ஒருதொகை சட்டவிரோத சிகரெட்டுகளுடன் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் நீண்டகாலமாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுபவராக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.(ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நாடாளுமன்ற வாக்கெடுப்புக்குத் தயாரா?

*'மூஞ்சுறு தான் போகக் காணோம். அதற்கிடையில் விளக்குமாற்றையும் தூக்கிக் கொண்டு புறப்பட்டதாம்...!'* – என்ற ஒரு கிண்டல் மொழி நம் மத்தியில் உண்டு.

ஆடுத்த ஆண்டு வரவு – செலவுத்திட்டத்துக்குப் பதிலாக, மைத்திரி – மஹிந்த அரசு இடைக்கால நிதி ஒதுக்கீட்டு வரைவைச் சமர்ப்பிக்க இருக்கின்றது என்றும் –

இதற்கான யோசனைத் திட்டம் ஓரிரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது என்றும் – வெளியாகியுள்ள செய்திகளைப் பார்க்கும் போது இந்தக் கிண்டல் மொழி வாசகம்தான் நினைவுக்கு வருகிறது.

அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தை பிரதமர் ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசு தயாரித்துக் கொண்டிருந்த சமயத்திலேயே, அந்த அரசை சட்டமுறையற்ற விதத்தில் கலைத்து வீட்டுக்கு அனுப்பிவிட்டு, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசை பின்கதவினால் அதிகாரத்துக்கு கொண்டு வந்தார் நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன .

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்று தன்னை சட்டமுறையான அரசு என்று நிரூபிக்க முடியாமல் தள்ளாடிக் கொண்டிருக்கின்றது தற்போதைய மைத்திரி – மஹிந்த அரசு.

தானும் நம்பிக்கை வாக்கெடுப்பை நாடாளுமன்றத்தில் கோரி, தனது சட்டரீதியான தகைமையை நிரூபிக்க முடியாமலும் –

நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் மாற்றுத் தரப்புக்கள் இந்த அரசுக்கு எதிராகக் சளைக்காமல் அடுத்தடுத்துக் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை இலத்திரனியல் முறையில் அல்லது தனித்தனிக் குரல் முறையில் வாக்கொடுப்புக்கு விட்டால் தனது அரசின் பெரும்பான்மை பெறமுடியாத இயலாமை அம்பலமாகி , பரகசியமாகிவிடும் என்ற அச்சத்தில் அந்த வாக்கெடுப்புகளையும், அமர்வுகளையும் குழப்பியபடியும் –

அல்லாடுகின்றது இந்த அரசு.

நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையை எதிர்கொள்ள வக்கற்ற – திராணியற்ற – பலமற்ற – இந்த அரசு, வரவு – செலவுத்திட்டத்துக்குப் பதிலாக இடைக்கால நிதி ஒதுக்கீட்டு வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, விவாதம் நடத்தி, அதை நிறைவேற்றப் போகின்றது எனப் பகல் கனவு காண்கிறது.

*' கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போவேன் என்றனாம்'*. அந்த மாதிரி இருக்கின்றது இடைக்கால நிதி ஒதுக்கீட்டு வரைவை நாடாளுமன்றத்தில் சமரப்பித்து அங்கீகாரம் பெறப் போகின்றோம் என்ற அரசுத் தரப்பினரின் பேச்சு...!

வழக்கமாக ஒரு பிரதமர் தலைமையிலான அரசை வீழ்த்துவதற்கு வரவு – செலவுத்திட்ட வாக்கெடுப்பை அல்லது நிதி ஒதுக்கீடு மீதான அரசுத் தரப்பின் வாக்கெடுப்பையே பிரதான சந்தரப்பமாகப் பயன்படுத்துவார்கள் .

நாடாளுமன்றில் நம்பிக்கை வாக்கெடுப்பைக் கோர முடியாது தவிக்கும் மைத்திரி – மஹிந்த கூட்டு அரசு, எலி தானாகவே வந்து பொறியில் சிக்குவது போல நிதி ஒதுக்கீட்டு வரைவை சமர்ப்பித்து நாடாளுமன்றப் பொறிக்குள் சிக்கப் போகின்றது.

பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களை பெறாத – பெறமுடியாத – பெற வக்கற்ற – இந்த அரசினால் வேறு எதுவும் செய்யமுடியாது.

அந்த நிதி ஒதுக்கீட்டு வரைவை இதோ சமர்ப்பிக்கின்றோம், அதோ சமர்பிக்கின்றோம் என்று கூறியபடி, நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தைப் பரீட்சிக்கும் ஒரு சோதனைக் களத்துக்கு இடமளிக்காமல், கொஞ்சக்காலம் ஆட்சியில் – அதிகாரத்தில் – வேண்டுமானால் நீடிப்பதற்கு இந்தத் திட்டம் இந்த அரசுக்கு உதவக் கூடும்.

ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழர் முன்னேற்றக் கூட்டணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய பொன்ற கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக உறுதியான நிலைப்பாட்டில் – பிரிந்து போகாத இறுக்கத்தில் – ஒன்றிணைந்து நிற்கின்றன.

போதாக்குறைக்கு இந்தத் தரப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 உறுப்பினர்களும் வலுவாக ஆதரவைத் தந்து நிற்கின்றனர்.

பணத்துக்கோ, பதவி ஆசைக்கோ இடம் கொடுக்காமல் இந்தத் தரப்புகள் உறுதியாக – ஐக்கியப்பட்ட நிலைப்பாட்டில் – தொடர்ந்து நீடிப்பதால் –

மஹிந்தர் அரசு இப்போதைக்கு நம்பிக்கை வாக்கெடுப்பிலோ அல்லது நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான ஏதேனும் பிரேரணை மீதான வாக்கெடுப்பிலோ நேரடியாக ஈடுபட்டு, தனது உறுதிப்பாட்டை நிரூபிக்கும் என்று எதிர்பார்ப்பது துர்லபம்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்ற ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கவே மாட்டடேன் என்று தவறான பிடிவாதத்தில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிற்பதால், சிறிசேனவின் தரப்பு நாடாளுமன்றதுக்கு உள்ளேயும் வெளியேயும் இன்னம் பல அவமரியாதைகளை – அவமானங்களை – சந்திக்க வேண்டியிருக்கும். அது தவிர்க்க முடியாது.

# சகல பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதியே காரணம்!

## லக்ஸ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு



நாட்டில் இத்தனைப் பிரச்சினைகளுக்கும் காரணமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்து ள்ளது.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டு விட்ட தாக சபாநாயகர் அறிவித்த பின்னர், அது தொடர்பில் விமர்சிக்கவோ கேள்வி எழுப்பவோ உயர் நீதிமன்றால் கூட முடியாது. ஜனாதிபதிக்கும் அந்த அதிகாரம் இல்லை.

ஜனாதிபதி யாரை வேண்டுமானாலும் பிரதமராக நியமிக்கலாம் என்று எமது நாட்டில் இன்று ஒரு கலாசாரம் தலை தூக்கியுள்ளது. ஜனாதிபதியொருவரே பிரதமரை நியமிக்கலாம் என அரசமைப்பில் கூறப்பட்டாலும், அவருக்கு நினைத்த வகையில் பிரதமரை நியமித்துவிட முடியாது.

பிரித்தானிய நாடாளுமன்றச் சம்பிரதாயத்துக்கு இணங்க பெரும்பான்மையான ஆதரவு உள்ள ஒருவரைத்தான் பிரத மராக்க முடியும். இந்த பிரித்தானியச் சம்பிரதாயத்தையும் நாமும் நாடாளுமன்றின் ஊடாக ஏற்றுக்கொண்டுள்ளோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான் காரணம். இதற்கானத் தீர்வை அவர் தான் உடனடியாக வழங்கவேண்டும் – என்றார். (ஐ)

# சபைக்குள் ஆயுதம் வைத்திருந்தோரை பாதுகாக்கின்றாரா சபாநாயகர் கரு?

## சு.க. பொதுச் செயலர் பியதாஸ கேள்வி

கொழும்பு, நவ. 23

நாடாளுமன்றத்துக்கு ஆயுதங்களைக் கொண்டு வந்தவர்களுக்கு எதிராகச் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் முறையிட்டுள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாத சூழலில், நாடாளுமன்றத்தில் தமது கட்சி உறுப்பினர்களின் நடவடிக்கைக்கு எதிராக நாம் எவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுப்பதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ கேள்வி எழுப்பினார்.

மருதானையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி அரசமைப்புக்கு அமைய எடுத்த தீர்மானங்களை சபாநாயகர் எவ்வாறு சவாலுக்கு உட்படுத்த முடியும். நாடாளுமன்றச் சம்பிரதாயங்களுக்கு அப்பால், சபாநாயகரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்குச் சபாநாயகர் கலரியிலிருந்த வெளிநாட்டுத் தூது வர்கள் எழுந்து நின்று கை தட்டினர். இது யாருடைய இலாபத்துக்காக செய்யப்பட்டது.

எனவே இன்று நாட்டில் இடம் பெறும் அரசியல் குழப்ப நிலை மேற்கத்தையே நாடுகளின் இணக்கப்பாட்டுடன் முன்னெடுக் கப்படும் சதி முயற்சியே – என்றார். (ஐ)

# பிரதம நீதியரசருக்கு சபாநாயகர் கடிதம் எதுவுமே அனுப்பவில்லை

## வெளியாகிய கடிதம் போலியானதாம்

கொழும்பு, நவ. 23

சபாநாயகர் கரு ஜயசூரியவால் பிரதம நீதியரசருக்கு அனுப்பப்பட்டதாகச் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ள கடிதம் பொய் எனச் சபாநாயகர் அலுவலகம் தெரிவித் துள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றும் செய்யப் பட்டுள்ளது.

புதிய பிரதமர் மற்றும் அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்காமை காரணமாக, நாட்டில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அரசமைப்பின் 37.2 சரத்துக்கமைய பிரதம நீதியரசரின் அனுமதியுடன் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்கள், முப்படைகளினதும் கட்டளைத் தளபதி பொறுப்பு என்பன தனக்கு கிடைக்க வேண்டுமெனத் தெரி வித்து பிரதம நீதியரசர் சுனில் பெரேராவுக்குச் சபாநாயகரால் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும் கடிதம் ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியிடப் பட்டுள்ள நிலையில், சபாநாயகர் அலுவலகம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

சபாநாயகர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பில் விசாரணை செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரிக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரியவின் பணிப்புரைக்கமைய, நாடாளு மன்ற செயலாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் இந்த முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2018

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகள் இருந்து காப்பற்றினாலும், முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை." *- ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)*

## நாளை

24.11.2018
சனிக்கிழமை
நட்சத்திரம்:ரோகிணி பி.ப. 5.32 வரை
திதி : பிரதமை மு.ப.10.50 வரை
சுபநேரம் :3.11 – 4.41 வரை
இராகுகாலம் : 9.11 – 10.41 வரை

# நிசாந்த சில்வாவின் இடமாற்றம்; ஜனாதிபதிக்குத் தொடர்பில்லை

## மஹிந்த சமரசிங்க அறிவிப்பு

கொழும்பு, நவ. 23

**குற்றப்புலனாய்வுத் துறையின் பொறுப்பதிகாரி கடமையில் இருந்து பொலிஸ் இன்பெக்ஸ்டர் நிசாந்த சில்வாவை இடமாற்றிய விவகாரத்துக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**



அரசதகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக் கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த இடமாற்ற விடயத்தில் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர முறையற்ற விதமாக நடந்திருந்தால் அவருக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கும் – என்றார்.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் தயாசிறிஜய சேகர, சர்வதேசத்துடன் இணைந்து ஜனாதிபதி மீது சேறுபூசும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளனர் எனக் குற்றம் சட்டினார். (ஐ)

# சாதாரண தரப் பரீட்சைக்கு 650,641 பேர் தோற்றவுள்ளனர்

கொழும்பு, நவ. 23

இவ்வருடம் நடைபெறவிருக்கும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு நாடாளவிய ரீதியில் 6 இலட்சத்து 50 ஆயிரத்து 641 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என இலங்கை பரீட்சைத் திணைக் களத்தின் உதவி ஆணையாளர் எஸ்.பிரகாசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் க.பொ.த. பரீட்சைகள் தொடர்பிலான கருத்தரங்கு ஒன்றில் நேற்று கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சாதாரணப் பரீட்சைக்கு 422,850 பாடசாலைப் பரீட்சார்த்தி களும், 233,791 தனிப்பட்ட பரீட்சாத்திகளும் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சையானது 4,661 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. பரீட்சைக்காக 541 இணைப்பு நிலையங்களும், 33 பிராந்திய நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

விசேட பரீட்சை நிலையங்களாக இரத்மலான, தங்கல்ல, சிலாபம் மற்றும் சிறைச்சாலைகள், வைத்தியசாலைகளிலும் பரீட்சை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# வசந்தவுக்கு ஹர்ஷ பதிலடி

கொழும்பு, நவ. 23

வசந்த சேனநாயக்க அரசுடன் மீண்டும் இணைந்தாலும் எமக்கு உள்ள பெரும்பான்மையில் பாதிப்பு ஏற்படாது என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டீ சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போதைய புதிய அரசில் பெற்ற அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனாநாயக்க, நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

இது தொடர்பில், தனது டுவிட்டர் சமூக வலைத்தளத்தில் பதிவொன்றை இட்டுள்ள ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டீசில்வா, வசந்த சேனாநாயக்க, அரசோடு மீண்டும் இணைந்துகொண்டாலும், அதனால், ஐ.தே.கவுக்கு உள்ள பெரும்பான்மைக்கு, எவ்விதப் பாதிப்பும் ஏற்படப்போவது இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# தொடர்ச்சியாகக் கூட்டமைப்பு அரசினால் ஏமாற்றப்படுகிறது

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, நவ. 23

இலங்கையில் ஆட்சிபீடமேறிய சகலரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமது அரசியல் தேவைகளுக்காக மாத்திரமே பயன்படுத்தியுள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கூறியுள்ளார்.

அதன் பின்னர் அவர்களைக் கைவிடும் அல்லது ஏமாற்றும் நிலையே காணப்படுகின்றதென வும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்று சமவுரிமையுடன் வாழ்வதற்கான வேலைத்திட்டங்களில், தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட மக்கள் விடுதலை முன்னணி தயாராக உள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்துக்கு மத்தியில், ஆட்சிப் பீடமேறும் தரப்பினரைத் தீர்மானிக்கும் சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது காணப்படுகிறது. பிரதமர் மாற்றம் மற்றும் நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவதோடு, அதே நிலைப்பாட்டிலேயே மக்கள் விடுதலை முன்னணியும் உள்ளது. – என்றார்.

இந்நிலையில், இவ்விரு தரப்பினரது ஆதரவைப் பெறும் முனைப்பில் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பு தீவிரமாகச் செயற்படுகின்றன.

எவ்வாறெனினும், எந்தத் தரப்பிற்கும் ஆட்சியமைக்க ஆதரவு வழங்கமாட்டோம் என்றும் நடுநிலையாகவே செயற்படுவோம் என்றும் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்திருந்தது. (ஐ)

# வாகனங்களின் விலை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 23

அடுத்த 2019ஆம் ஆண்டில், வாகனங்களின் விலைகள், 10 முதல் 15 சதவீதம் வரை அதிகரிக்குமென வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி, டொலரின் பெறுமதி அதிகரிப்புக்கேற்ப, இலங்கை ரூபாவின் பெறுமதி குறைந்தமை போன்ற காரணங்களாலேயே வாகனங்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# மஹிந்தவைப் பிரதமராக்கியது மைத்திரிபாலவின் சகோதரரா?

## உதயங்கவின் கருத்தால் புதிய சர்ச்சை

மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு முன்மொழிந்தவர், அவரது சகோதரரான டட்லி சிறிசேனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரான டட்லி சிறிசேன பொலனறுவையில் பிரபலமான அரிசி ஆலை வணிகராவார்.

அவரது 58 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரும், மஹிந்தவுக்கு நெருக்கமானவருமான உதயங்க வீரதுங்க, வாழ்த்துச் செய்தி ஒன்றைத் தனது முகநூலில் பதிவு செய்துள்ளார்.

இதில், டட்லி சிறிசேனவுக்கு வாழ்த்துத் தெரிவித்திருப்பதுடன், மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் மொழிந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, தன்னையும் கோட்டாபய ராஜபக்ஷவையும் கொலை செய்யும் சதித் திட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கத் தவறியதால்தான், ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி நீக்கிவிட்டு, மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்தார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

ஆனால், டட்லி சிறிசேனவின் பரிந்துரைக்கமையவே மஹிந்த பிரதமராக நியமிக்கப்பட்டார் என்ற உதயங்க வீரதுங்கவின் பதிவு புதிய சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

அத்துடன், மிக் போர் விமானக் கொள்வனவு ஊழல் தொடர்பான வழக்கில் இலங்கையில் தேடப்படும் நபரான உதங்க வீரதுங்கவுக்கும் ஜனாதிபதியின் சகோதரருக்கும் இடையிலான நெருக்கம் குறித்தும் சந்தேகங்கள் எழுந்துள்ளன. (ஐ)









**யாழ் நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தின் பரிசளிப்பு நிகழ்வு நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்றது. இன் நிகழ்வில் முதன்மை விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்வி பணிப்பாளர் பிரான்சிஸ் சேவியர் அன்ரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக விரிவுரையாளர் தி.நிசாங்கன் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக வலி கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் ந.கஜேந்திரகுமார் மற்றும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் தெ.கிரிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.**

# கஜா புயல் நிவாரணத்துக்கு ரூ.15 ஆயிரம் கோடி தேவை

## தமிழக முதல்வர் மோடியிடம் கோரிக்கை



புதுடில்லி, நவ. 23

தமிழகத்துக்கு கஜா புயல் நிவாரணமாக மத்திய அரசிடம் 15,000 கோடி ரூபா கோரியதாக முதல்வர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி நேற்று வியாழக் கிழமை டில்லியில் பிரதமர் நரேந் திர மோடியை சந்தித்து கலந்துரை யாடினார்.

இந்தச் சந்திப்பின் பின்பு ஊடகங்களுக்கு கருத்து தெரி வித்த முதல்வர் எடப்பாடி பழனி சாமி, தமிழகத்தில் கஜா புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் சேத விவரங்களை பிரதமரிடம் எடுத்துக் கூறி, புயல் நிவாரணமாக 15,000 கோடி ரூபா வழங்க வேண்டும் எனக் கோரியுள்ளதாகத் தெரிவித்தார்.

அதற்கமைய மத்திய குழுவை தமிழகத்திற்கு அனுப்பி, சேத விவரங்களை பார்வையிட்டு விரைவில் நிதி ஒதுக்கீடு செய்வதற்காக மத்திய குழுவை அனுப்புவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார் எனவும் முதல்வர் எடப்பாடி பழனி சாமி தெரிவித்துள்ளார்.

கஜா புயலால் 12 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை புயல் காரணமாக இதுவரையில் 63 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பாதிக்கப்பட்ட வர்களுக்கு நிவாரண உதவிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேபோல் புயலால் சேதமடைந்த வீடு கள், பாதிக்கப்பட்ட விளைநிலங்கள், பயிர்கள், படகுகள் எனச் சேத விவரங்களையும் முதல்வர் விளக்கமாகக் கூறியமையோடு நிவாரண உதவி கள் குறித்த புள்ளி விவரங்களையும் வெளியிட்டுள் ளார். (ஐ)

# கஜா புயல் பாதிப்புப் பகுதிகளை ஹெலியில் சென்று பார்த்தது ஏன்?

## முதல்வர் எடப்பாடி விளக்கம்



சென்னை, நவ. 23

கஜா புயல் பாதிப்பு பகுதிகளை ஹெலிக்கொப்டரில் சென்று பார்வையிட்டமை கண்துடைப்பு பயணம் என விமர்சனம் செய்த மு.க.ஸ்டாலினுக்கு முதல்வர் எடப்பாடி பழனிசாமி பதில் அளித் துள்ளார்.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி நேற்று வியாழக் கிழமை டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின் பின்பு ஊட கங்களுக்கு கருத்து தெரிவித்த வேளை, பாதிப்படைந்த பகுதி களைப் பார்வையிட நீங்கள் ஏன் சாலை மார்க்கமாகச் செல்ல வில்லை? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட இடங்களை தான் பார்வையிட மாத்திரம் செல்லவில்லை. முழுச் சேதம் குறித்து தெரிந்து கொள்ளவேண் டும் என்பதோடு அங்கே என்ன பாதிக்கப்பட்டிருக்கிறது என்ப தைத் தெரிந்து அதற்கமைய நிவாரணங்களை வழங்க முடி யும் என்பதற்காகத்தான் நாம் நேரடியாக சென்றோம்.

தான் ஹெலி மூலம் செல் கின்றபோது எவ்வாறான பாதிப்பு கள் இடம்பெற்றுள்ளன என் பதைத் தாழ்வாகப் பறந்து கண்காணித்ததோடு புகைப்படங் களையும் எடுத்ததாக தெரிவித்தார்.

மு.க..ஸ்டாலின் சாலை மார்க்கமாக இரண்டு மூன்று இடங்களுக்கு மாத்திரமே சென்று பார்வையிட்டுள்ளார். இவ்வாறு ஓரிரு இடங்களை மாத்திரம் பார்வையிட்டால் உண்மை நிலை வரங்களை தெரிந்துகொள்ள முடியாது என்பதோடு நிவாரண மும் வழங்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)

# சபரிமலையில் சரண கோஷம் எழுப்புவதைத் தடுக்கக்கூடாது

## உச்சநீதிமன்றம் உத்தரவு



புதுடில்லி, நவ. 23

சபரிமலை ஐயப்பன் சன்னிதானத்தில் சரண கோஷம் எழுப்பு வதை நிறுத்துமாறு கூறக்கூடாது எனப் பொலிஸாருக்கு கேரள உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்தோடு 144 தடை உத்தரவு பிறப்பித்ததற்கு மத்திய அரசிடம் விளக்கம் கோரியுள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் அனைத்து வயது பெண்களும் வழிபடலாம் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து ஐயப்பன் கோவில் போராட்டக் களமாக மாறியுள்ளது.

அதை தடுக்க கோவில் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் கேரள மாநில அரசு 144 தடை உத்தரவு பிறப்பித்தது.

இதை எதிர்த்து கேரள உச்ச நீதிமன்றத்தில் ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.


இந்த மனுக்கள் நேற்று முன் தினம் புதன்கிழமை நீதிபதிகள் ராமச்சந்திரமேனன், அனில்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது கோவிலில் பக்தர்களுக்கு வசதி செய்து தரு மாறு தாங்கள் பிறப்பித்த உத்தரவை அமுல்படுத்தாது 144 தடை உத்தரவு பிறப்பித்த கேரள அரசுக்கு நீதிபதிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

ஐயப்பன் கோவில் சன்னிதானத்தில் 'சாமியே சரணம் ஐயப்பா' என்று சரண கோஷம் எழுப்புவதில் தவறு இல்லை என்றும் சரண கோஷம் எழுப்புவதை நிறுத்துமாறு பொலிஸார் கூறக்கூடாது என் றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சன்னிதானத்தில் 144 தடை உத்தரவு பிறப்பித்ததற்கான சூழ் நிலை பற்றி கேரள அரசின் வழக்கறிஞர் அனைத்து ஆவணங் களையும் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் கோவிலைச் சுற்றி உள்ள பகுதிகளிலும் 144 தடை உத்தரவு பிறப்பித்தது பற்றி பத்தனம் திட்டா மாவட்ட ஆளுநர் ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் சன்னிதானத்தில் கட்டுப்பாடுகள் விதித்தது பற்றி கேரள அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தி யுள்ளனர்.

# ஆளுனரின் காரை மறிக்க மக்கள் முயன்றதால் திருவாரூரில் பதற்றம்



சென்னை, நவ. 23

திருவாரூர் மாவட்டத்தில் புயல் பாதிப்பு பகுதி களை பார்வையிட சென்ற ஆளுனர் பன்வாரிலால் புரோகித்தின் காரை மறிக்க பொதுமக்கள் முயன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் கஜா புயல் பாதிப்புப் பகுதிகளை ஆளுநர் பன்வாரிலால் புரோகித் பார்வையிட்டு வருகின்றார்

அந்த வகையில் நேற்று வியாழக்கிழமை திரு வாரூர் பகுதியை பார்வையிடச் சென்றிருந்தார்.

இந்நிலையில் ஆளுனரின் வாகனம் மேட் டுப்பாளையம் கிராமத்தைக் கடந்து சென்றபோது அவரது காரை மறிக்க அப்பகுதி பொதுமக்கள் முயற்சி செய்துள்ளனர்.

எனினும் ஆளுநரின் வாகனம் அந்த இடத் தைக் கடந்து சென்றமையினால் அதிகாரிகள் வந்த காரை மறித்து பொதுமக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

புயலால் தங்கள் வீடுகள் இடிந்துள்ள நிலை யில், இங்கு அதிகாரிகள் யாரும் வரவில்லை என்பதோடு இதுவரையில் மின்சாரமும் வழங்கப்பட வில்லை எனப் பொதுமக்கள் குற்றம்சாட்டினர்.

இதனால் அப்பகுதியில் திடீர் பரபரப்பு ஏற்பட்டதையடுத்து பொதுமக்களைச் சமாதானம் செய்த அதிகாரிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள நட வடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர். (ஐ)

# மோடியின் கருத்திற்கு மன்மோகன்சிங் பதில்



புதுடில்லி, நவ. 23

தான் பிரதமராக இருந்தபோது தன்னை யாரும் தொலையியக்கி (Remote Control) மூலம் இயக்க வில்லை என முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மத்திய பிரதேசத்தில், தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி சோனியா காந்தியின் கைப்பாவையாக மன்மோகன்சிங் அரசு இருந்தது என விமர்சித் திருந்தார்.

மத்தியப் பிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் இந்தூரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே பிரதமர் நரேந்திரமோடியின் கருத்துக்கு பதிலளித்துள்ளார்.

தனது தலைமையிலான அரசை யாரும் பின்னணியில் இருந்து தொலையியக்கி (Remote Control) மூலம் இயக்கவில்லை என தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசும் இணைந்து ஒன்றாக செயற்பட்ட தாக தெரிவித்த அவர், அரசுக்கும் கட்சிக்கும் கருத்து வேறுபாடு இல்லை என்பதால் தான் அது வெற்றி கரமான அரசாக இருந்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

ரபேல் விவகாரத்தில் கூட்டு நாடாளுமன்றக் குழு விசாரணை நடத்த வேண்டும் என்ற எதிர்க் கட்சிகளின் கோரிக்கையை நரேந்திரமோடி அரசு தொடர்ந்து நிராகரித்து வருவதாக குற்றம் சுமத்திய அவர், இதன் மூலம் அந்த ஒப்பந்தத்தில் முறைகேடு இடம்பெற்றிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு நரேந்திரமோடியின் ஆட்சியில் நாடாளுமன்றக் குழுவும், குற்றப்புலனாய்வு திணைக்களமும் தொடர்ந்து அவமதிக்கப்பட்டு வருகின்றன எனவும் குற்றம் சாட்டினார்.

# பொதுநலவாயத்தில் மீளவும் இணைகின்றது மாலைதீவு!

மலே, நவ. 23

பொதுநலவாய அமைப்பில் மீண்டும் இணைந்துகொள்ள மாலைதீவு தீர்மானித்துள்ளது. அந்தவகையில் எதிர்வரும் கூட்டத்தொடர்களில் மாலைதீவு பங்குபற்றும்.

மாலைதீவு அமைச்சரவையின் பரிந்துரையின் பின்னர் ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சொலி இந்தத் தீர்மானத்தை எடுத்தார் என அந்நாட்டு ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொதுநலவாய அமைப்பில் பங்கேற்பதால் கிடைக்கும் அனுகூலங்கள், குறிப்பாக மாலைதீவு மக்களுக்கான கல்வி மற்றும் வேலைவாய்ப்பு, புலமைப்பரிசில், தேசிய ரீதியிலான போட்டிகளில் பங்குபற்றுதல் போன்ற விடயங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அமைச்சரவைக் கூட்டத் தின்போது அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்தோடு, மனித உரிமை, கருத்துச் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை மேம்படுத்தும் விடயங்களில் சர்வதேச நாடுகளுடனான தொடர்பைப் பேணலாம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். அதுமட்டு மன்றி நிலையான அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விடயங்களிலும் அனுகூலங்களை



பெறலாமென அமைச்சரவை கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இவற்றின் பிரகாரம் பொதுநலவாய அமைப்பின் அங்கத்தவராக மாலைதீவு மீண்டும் இணையவுள்ளது.

பொதுநலவாய அமைப்பின் உறுப்பினராக கடந்த 1982ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி மாலைதீவு முதன்முறையாக இணைந்து கொண்டது. 33 வருடங்கள் பொதுநலவாய அமைப்பில் நீடித்த மாலைதீவு கடந்த 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி அதிலிருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளை மாளிகையில் செய்தி சேகரிக்க சி.என்.என். ஊடகத்துக்கு மீளவும் அனுமதி

வெள்ளை மாளிகையில் செய்தி சேகரிப்பதற்கு சி.என்.என். செய்தியாளருக்கு அனுமதி மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ட்ரம்ப் செய்தியாளர் சந்திப்பின் போது சி.என்.என். செய்தியாளர் ஜிம் அகோஸ்டா அகதிகள் குறித்து கேள்வி எழுப்பினார். இதன்போது இருவருக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில் செய்தியாளர் ஜிம் அகோஸ்டா வெள்ளை மாளிகை பெண் பணியாளரைத் தொட்டு அநாகரீகமாக நடந்து கொண்டார் எனவும், வெள்ளை மாளிகையில் செய்தி சேகரிக்க அவருக்கு அனுமதி இரத்துச் செய்யப்படுவதாகவும் வெள்ளை மாளிகை அறிக்கை வெளியிட்டிருந்தது.

இதற்கு எதிராக சி.என்.என். தொடர்ந்த வழக்கில் ஜிம் அகோஸ்டாவை வெள்ளை மாளிகைக்குள் அனுமதிக்க வொஷிங்டன் நீதிமன்றம் உத்தர விட்டது. இதற்கு எதிராக வெள்ளை மாளிகை தொடர்ந்த வழக்கையும் தள்ளுபடி செய்தது.

இந்நிலையில் வெள்ளை மாளிகையில் இருந்து சி.என்.என்.னுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் ஜிம் அகோஸ்டா வெள்ளை மாளிகையில் செய்தி சேகரிப்பதற்கான அனுமதியை முழுமையாக வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காட்டுத் தீ ஓய்ந்த நிலையில் தொடர்கிறது அடை மழை!

## கலிபோர்னியா மக்கள் திண்டாட்டம்

நியூயோர்க், நவ. 23

கலிபோர்னியா மாநிலத்தில் கடந்த வாரங்களில் சொல்லொணா துன்பத்தை ஏற்படுத்திய காட்டுத் தீ ஓய்வுக்கு வந்த நிலையில் தற்போது மாநிலத்தின் வடபகுதியில் அடை மழை ஆரம்பித்துள்ளது.



இது காட்டுத் தீயை மேலும் பரவாமல் தடுக்கும் என்கின்ற போதும், மீட்புப்பணியாளர்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளதே உண்மை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நீண்ட நாட்களுக்கு பின்னர் அங்கு மழை பெய்வதையிட்டு ஒருபுறம் நன்மையாக இருக்கின்ற போதும் காட்டுத் தீயால் இருப்பிடங்களை இழந்து தற்காலிக கூடாரங்களில் தங்கியுள்ள மக்களுக்கு சற்று கடினமான சூழ் நிலையையே ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் புட்டி கவுண்டியில் ஆரம்பித்த காட்டுத் தீ மாநிலத்தின் பெரும்பகுதியை நாசமாக்கியதுடன், 81 பேரின் உயிர்களைக் காவுகொண்டது. இதனிடையே 870 பேரை இன்னமும் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 14,000 கட்டடங்கள் முன்றாகவே பகுதியளவிலோ தீயினால் சேதமடைந்தன.

கலிபோர்னிய மாநிலத்தின் 80 சதவீதமான பகுதியில் ஓரளவுக்கேனும் தீப்பரவியிருந்ததுடன், இன்னும் சில பகுதிகளில் ஆங்காங்கே தீச்சுவாலைகள் தென்படுவதாக தீயணைப்பு படையினர் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே, மீண்டும் தீப்பரவல் ஏற்படலாம் என்று சந்தேகமுள்ள பகுதிகளில் உள்ளூர் தீயணைப்பு படையினர் கண்காணிப்பு பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர். மழை காலநிலை தீப்பரவலை கட்டுப்படுத்தும் என்ற போதும், காணாமல் போனவர்களை தேடும் பணிகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

பெரும்பாலான வர்த்தக நிலையங்களும் சேதமடைந்துள்ள நிலையில், பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்வதிலும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளனர். இதுதவிர, மழையில் இருந்து தப்பிப்பதற்காக சிறியளவிலான கூடாரங்களில் ஆங்காங்கே தங்கியுள்ளனர்.

பெரும் மழை காலநிலை ஆரம்பிக்கும் முன்னதாக தீயணைப்பு படையினரும், மீட்பு பணிகளை துரிதப்படுத்தி வருவதாக அமெரிக்க வன பாதுகாப்பு சேவை, பொது தகவல்கள் அதிகாரி ஜிம் மெக்கென்சன் தெரிவித்தார். சில இடங்களில் சேறும், சகதியுமாக இருக்கின்ற காரணத்தினால் பணிகள் மிகவும் கடினமாக உள்ளன.

இந்தநிலையில், அதிகளவில் மழைவீழ்ச்சி ஏற்படும் பகுதிகளில் பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு கோரப்பட்டுள்ளது. வெள்ளப் பெருக்கு அல்லது மண்சரிவு அபாயங்கள் ஏற்படலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கஷோக்ஜி கொலை:

# இளவரசரை நீக்குவதா? சாத்தியமே இல்லையாம்



ரியாத், நவ. 23

சவுதி பத்திரிகையாளர் ஜமால் கஷோக்ஜியின் கொலை தொடர்பாக உலகின் பல நாடுகளிலும் எதிர்ப்பு குரல்கள் மற்றும் கண்டனங்கள் உள்ள நிலையில், சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானை நீக்க வேண்டும் என்ற அறைகூவல்கள் அபாய கரமானவை என்றும், அவை நடப்பதற்குச் சாத்தியமேயில்லை என்றும் அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் பிபிசியிடம் தெரிவித்தார்.

துருக்கியில் உள்ள இஸ்தான்புல்லில் கடந்த ஒக்ரோபர் 2ஆம் தேதி நடந்த கஷோக்ஜியின் கொலையில் சவுதி இளவரசருக்கு எந்த பங்கும் இல்லை என்று அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் அடேல் அல் - ஜுபேர் குறிப்பிட்டார்.

கஷோக்ஜியின் கொலையில் சல்மானுக்குத் தொடர்பு உள்ளதா என்று விசாரிக்க வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்றம் கோரிக்கை விடுத்தற்கு அடுத்த நாளில் சவுதி அமைச்சரின் இந்த மறுப்பு வெளிவந்துள்ளது.

செவ்வாய்க்கிழமையன்று வெளியிட்ட அறிக்கையொன்றில் ஜமால் கஷோக்ஜி மிருகத்தனமாக கொல்லப்பட்டது குறித்து சௌதியின் இளவரசர் முகமது பின் சல்மானுக்கு 'தெரிந்திருக்கும் அல்லது தெரியாமல் கூட இருக்கலாம்' என்று டிரம்ப் தெரிவித்திருந்தார்.

ஜமால் கஷோக்ஜி கொல்லப்பட்ட விவகாரத்தில் உலக நாடுகளிடமிருந்து கடும் கண்டனங்களைச் சவுதி அரேபியா பெற்றபோதும், அந்நாட்டிற்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கூறினார்.

பி.பி.சியின் தலைமைச் சர்வதேச செய்தியாளரான லீஸ் டூஸேட்டுடன் பேசிய அடேல் அல்-ஜுபேர், "சவுதி அரேபியாவில் எங்கள் தலைமை யாராலும் நீக்கி முடியாத உயரத்தில் உள்ளது. மன்னர் சல்மானும், இளவரசர் முகமது பின் சல்மானும் அவ்வாறான நிலையில் உள்ளவர்கள்" என்று தெரிவித்தார்.

"அவர்கள் இருவரும் சவுதியின் ஒவ்வொரு குடிமகனின் பிரதிநிதிகளாக விளங்குகின்றனர். நாட்டின் மக்களும் இவர்களின் பிரதிநிதிகளாக உள்ளனர். அதனால் எங்கள் மன்னர் அல்லது பட்டத்து இளவரசரை இகழ்வது போன்ற எந்த விவாதத்தையும் எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது" என்று அவர் மேலும் கூறினார்.

ஜமால் கஷோக்ஜியின் கொலையில் இளவரசருக்கு எந்தப் பங்கும் இல்லை என்று அடேல் அல்-ஜுபேர் மீண்டும் அழுத்தம் திருத்தமாக தெரிவித்தார்.

"நாங்கள் இது குறித்து மிகவும் தெளிவாகக் கூறிவிட்டோம். இந்த கொலை தொடர்பான விசாரணைகள் நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு காரணமானவர்களை நாங்கள் தண்டிப்போம்" என்று அமைச்சர் அடேல் அல்-ஜுபேர் குறிப்பிட்டார்.

பத்திரிகையாளர் ஜமால் கஷோக்ஜியை கொலை செய்வதற்கான உத்தரவை சவுதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் தான் அளித்தார் என அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவன மான சி.ஐ.ஏ. நம்புவதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இது தொடர்பான ஆதாரங்களின் விரிவான மதிப்பீட்டை சி.ஐ.ஏ. செய்துள்ளதாகவும் அதன் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக, பத்திரிகையாளர் ஜமால் கஷோக்ஜியின் கொலையை விசாரிப்பதில் அதிபர் ட்ரம்ப் நேர்மையாக செயல் படவில்லை என்று குற்றஞ்சாட்டி, வெள்ளை மாளிகைக்கு வர அமெரிக்க அதிபர் ஜனாதிபதி விடுத்த அழைப்பை கஷோக்ஜியின் காதலி ஹட்டீஜ் ஜெங்கிஸ் நிராகரித்தார்.

ட்ரம்ப் தன்னை வெள்ளை மாளிகைக்கு அழைத்திருப்பது அமெரிக்காவில் அவரைப் பற்றிய நல்ல கருத்தை தோற்றுவிப்பதற்கு என எண்ணுவதாக ஹட்டீஜ் ஜெங்கிஸ் கூறினார்.

முன்னதாக, அமெரிக்காவில் வாழ்ந்து வந்த ஜமால் கஷோக்ஜி, சௌதி அரசைப் பற்றி கடுமையாக விமர்சித்து வந்தார்.

துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள சவுதி துணைத் தூதரகத்துக்கு சென்ற அவர் திரும்பவே இல்லை. பிறகு அவர் கொல்லப்பட்டதாக செய்தி வெளியானது.

இந்த சம்பவத்தால் சவுதி அரேபியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள உறவில் சிக்கல் ஏற்பட்டதாக கூறப்பட்டது. (ஐ)

காலைக்கதிர்
Kalaikkathir



**பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 93 ஆவது அவதார தினம் (23 நவம்பர் 2018) இன்றாகும். அதையொட்டி இந்தச் சிறப்புக் கட்டுரை வெளியிடப்படுகிறது.**

# கலியுக அவதார புருசர் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா

ஸ்ரீ சத்திய சாய் பாபா அவர்கள், ஓர் இந்திய ஆன்மீக குருவாகப் போற்றப்பட்டவர்ஆவார். இவருடைய ஆன்மீகப் பற்றில் ஈடுபாடு கொண்ட பக்தர்கள் அவரை, கடவுளின் அவதாரமாகவே கருதினர். இந்தியாவில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலும் தன்னுடைய நிறுவனங்களின் மூலம் ஏராளமான இலவசக் கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் மூலம் சேவைகள் புரிந்து வந்தார். இவருடைய பெயரில் சுமார் 1200 க்கும் மேற்பட்ட சமூக அமைப்புகள் உலகம்முழுவதும் செயல்பட்டு வருகின்றது. இந்தியாவின் முன்னணி ஆன்மீகத் தலைவர்களுள் ஒருவராகப் போற்றப்படும் பகவான் சத்தியசாய் பாபா அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளை ஏற்றிப் போற்றத் தகுந்தமை.

பிறப்பு: நவம்பர் 23, 1926

பிறப்பிடம்: புட்டபர்த்தி (அனந்தபூர் மாவட்டம்), ஆந்திரப்பிரதேசம் மாநிலம், இந்தியா

பணி: ஆன்மீகவாதி, சமூக சேவகர்

இறப்பு: ஏப்ரல் 24, 2011

நாட்டுரிமை: இந்தியன்

**பிறப்பு**

சத்திய நாராயண ராயூ என்ற இயற்பெயர்கொண்ட இவர், 1926ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் நாள், இந்தியாவின் ஆந்திரப்பிரதேசம் மாநிலத்தில் அனந்தபூர் மாவட்டத்திலுள்ள புட்டபர்த்தி என்ற இடத்தில் பெத்தவெங்கம ராயூ என்பவருக்கும், ஈசுவராம்மாவுக்கும் எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

**ஆரம்ப வாழ்க்கை**

சத்ய நாராயண விரதம் இருந்து பிறந்ததால், இவருடைய பெற்றோர்கள் இவருக்கு சத்திய நாராயணன் எனப் பெயர்சூட்டினர். புட்டபர்த்தியில் உள்ள ஒரு பள்ளியில் தன்னுடைய ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்த அவர், இளம் வயதிலேயே பக்தி மார்க்கம் சார்ந்த நாடகம், இசை, நடனம், மற்றும் கதை எழுதுதல் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார்.

**வியக்கதக்க அற்புதங்கள்**

அவர் படிக்கும் பொழுது, தன்னுடைய நண்பர்கள் ஏதாவது கேட்டால் உடனே அதை வரவழைத்து நண்பர்களுக்குக் கொடுப்பார். இதனால் அவரை சுற்றி எப்பொழுதும் நண்பர்கள் இருந்துகொண்டே இருப்பார்கள். ஒரு நாள் தன்னுடைய வீட்டில் இருந்தவர்கள்முன், கையில் கற்கண்டு வரவழைத்து காண்பித்தார். இதைக் கண்ட அவருடைய தந்தை அவரைக் கண்டித்தார். ஆனால் அவர் நான்தான் சாய் பாபா என்றும், 'சீரடிசாய் பாபாவின் மறுஜென்மம் நானே!' என்றும் கூறினார். அவருடைய பேச்சும், செய்த அற்புதங்களும் மக்களிடையே பரவத் தொடங்கியன. அவர் பலரும் வியக்கதக்க வகையில் விபூதி தருதல், மோதிரங்கள், கடிகாரங்கள், லிங்கம் போன்றவற்றை வரவழைத்து அற்புதங்கள் நிகழ்த்தியதால், பக்தர்கள் அவரைத் தேடி வர ஆரம்பித்தனர்.

சாய்பாபாவின் ஆன்மீகப் பயணம் மற்றும் சமூக சேவைகள்:-

1940 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில், பல்வேறு இடங்களுக்கு சென்ற அவர், தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு அருள் வழங்கினார். அவருடைய ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு கொண்ட பக்தர்கள், அவரை 'கடவுளின் அவதாரம்' எனக் கருதி, 1944 ஆம் ஆண்டு அவருக்கு கோயில்கள் எழுப்பினர். பின்னர் 1954 ஆம் ஆண்டு, அங்கு ஒரு சிறு மருத்துவமனையைத் தொடங்கி, அங்குள்ள மக்களுக்கு இலவச மருத்துவ வசதி



அளித்தார். மேலும், இவருடைய பெயரில் பல தொண்டு நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, இலவசக் கல்வி மற்றும் மருத்துவம், பாடசாலைகள், உயர்கல்வி நிலையங்கள், குடிநீர் வழங்குதல் எனப் பல்வேறு திட்டங்களில் சேவைப் புரிந்து வருகிறது.

இந்தியாவில் மட்டுமல்லாமல், உலகில் சுமார் 130க்கும் மேற்பட்ட நாடுகளில் இவருடைய பெயரில் தொண்டுநிறுவனங்கள்நிறுவப்பட்டு, மக்களுக்கு பயனளிக்கும் வகையில் அவை சேவைகள்புரிந்து வருகின்றன. தூய குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தின் கீழ், இந்தியாவில் பல கிராமங்களுக்கு நல்ல குடிதண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மக்களின் குடிநீர் பிரச்சனையை தீர்க்க தெலுங்கு - கங்கை திட்டத்தினை சீர் செய்து, மக்களின் தாகத்தினை தீர்த்து வைத்தார். பிறகு 1968 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் நைரோபி, உகாண்டா போன்ற வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார்.

**கொலை முயற்சி**

ஜூன் 6, 1993 ஆம் ஆண்டு புட்டபர்த்தியில் உள்ள அவருடைய இல்லத்திற்குள் நான்கு இளைஞர்கள் கத்தியுடன் அத்துமீறி நுழைந்து, கொலை செய்ய முயன்றனர். இதில் இரு பணியாளர்கள் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர். அத்துமீறி நுழைந்த நால்வரும், காவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனால் இவர் மீது நடந்த கொலை முயற்சி முறியடிக்கப்பட்டது.

**இறப்பு**

ஸ்ரீசத்திய சாய் பாபா தன்னுடைய இறுதிகாலத்தில், உடல் நலக்குறைவு மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக சத்திய சாய் மருத்துவக்கழக மருத்துவமனையில் 2011 ஆம் ஆண்டு மார்ச் 28 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். பிறகு அமெரிக்காவிலிருந்து மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டு, சிகிச்சை மேற் கொண்டனர். இருந்தபோதும் 2011 ஆம் ஆண்டு, ஏப்ரல் 24 ஆம் திகதி அதிகாலையில் அவர் இயற்கை எய்தினார்.



பகவான் சத்திய சாய் பாபா அவர்களுக்கு சுமார் 100 கோடிக்கும் அதிகமான பக்தர்கள் உலகம் முழுவதும் காணப்படுகின்றனர் எனக் கூறப்படுகிறது. இவருடைய ஆன்மீக பக்தியில் ஈடுபாடு கொண்ட பல தலைவர்களும், பிரதமர்களும், கிரிக்கெட் வீரர்களும், திரைப்பட நடிகர் மற்றும் நடிகைகளும், வர்த்தகர்களும் மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் மேலும் கோடிக்கணக்கான பக்தர்களும் இவரை இன்றைக்கும் கடவுளாக வழிபாடு செய்து வருகின்றனர்.

**காலவரிசை**

1926 - நவம்பர் 23 ஆம் நாள், இந்தியாவின் ஆந்திரப்பிரதேசம் மாநிலத்தில் அனந்தபூர் மாவட்டத்திலுள்ள புட்டபர்த்தி என்ற இடத்தில் பிறந்தார்.

1954- புட்டபர்த்தியில் ஒரு மருத்துவமனையைத் தொடங்கினார்.

1968 - நைரோபி, உகாண்டா போன்ற வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்.

1993 - இவர் மீது நடந்த கொலை முயற்சி தடுக்கப்பட்டது.

2011 - மார்ச் 28 தேதி உடல் நலக் குறைவு மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

2011 - ஏப்ரல் 24 ஆம் தேதி அதிகாலையில் மரணமடைந்தார்.

# இறைச்சிக்காகக் களவாடப்பட்ட 17 பசுக்கள் நவாலியில் சிக்கின!

## வட்டுக்கோட்டைப் பொலிஸார் மீட்டனர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 23



**யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கடந்த சில தினங்களாக இறைச்சிக்காகக் களவாடப்பட்ட 17 பசு மாடுகள் வட்டுக்கோட்டைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.**

**நவாலி கொத்துக்கட்டி வீதி, மாரியம்மன் கோவிலடி வெளியில் அவை மறைவாக அடைக்கப்பட்டிருந்த நிலையிலேயே பொலிஸார் பசு மாடுகளை மீட்டுள்ளனர்.**

இந்தப் பகுதியில் வசித்து வரும் ஒருவர் நவாலியில் மாட்டிறைச்சிக் கடை ஒன்றை நடத்தி வருகின்றார். அவருடைய வீட்டுக்குப் பின்னால் உள்ள வெளியில் இரவோடு இரவாக பல மாடுகள் கொண்டு வந்து அடைத்து வைக்கப்படுவதை அப்பகுதி மக்கள் அவதானித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒரு சிலர் தமது பசு மாட்டைக் காணவில்லை என்று கூறி அப்பகுதிக்குத் தேடுவதற்கு வந்துள்ளனர். இதன் போது மாரியம்மன் கோவிலடியில் உள்ள வெளியில் தமது மாடுகள் கட்டப்பட்டிருப்பதைக் கண்டுள்ளனர்.

இது குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் அந்த மாடுகளை அங்கு கட்டி வைத்திருந்த 4 பேரைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு நின்ற 8 மாடுகளை ஏற்றிக் கொண்டு பொலிஸ் நிலையத்திற்கு சென்றுள்ளனர். ஏனைய மாடுகளைப் புகைப்படம் எடுத்த பொலிஸார் அந்தப் பசு மாடுகளின் உரிமையாளர்கள் உள்ளார்கள் என்றும், அதனால் அவை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லத் தேவை இல்லை என்றும் கூறி மறைவாக மாடுகள் கட்டப்பட்டிருந்த இடத்திலேயே விட்டுச் சென்றுள்ளனர்.

அந்த மாடுகளைப் பொலிஸ் நிலையத்துக்கு ஏற்றிச் செல்வதற்காக அழைக்கப்பட்ட வாகனத்தையும் தேவை இல்லை என்று கூறி பொலிஸார் அங்கிருந்து அனுப்பிவிட்டனர்.

இருப்பினும் சம்பவ இடத்தில் நின்ற பசு மாடுகளை உரிமை கோரி எந்தப் பொது மகனும் அங்கு வந்திருக்காத நிலையில் பொலிஸாரின் இந்தச் செயல் சம்பவ இடத்தில் நின்றவர்களைச் சந்தேகம் கொள்ள வைத்துள்ளது. (ஐ-07)

## தெரிவுக் குழுவுக்கு மஹிந்த தரப்பு 7 பேரை நியமனம் செய்ய முடியாது

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு 7 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய முடியாது என முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத குழு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பெரும்பான்மையைப் பெற முடியாது என நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தெளிவாகக் கூறியுள்ளார். – என்றார்.

## சமகால அரசியல் குறித்து மன்னாரில் கருத்தமர்வு

சமகால அரசியல் நிலைமை தொடர்பான கலந்துரையாடல் கருத்தமர்வு நேற்று வியாழக்கிழமை மன்னாரில் இடம்பெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் நிதி அனுசரணையில், மன்னார் மாவட்ட ஒப்புன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கருத்தமர்வு மன்னார் மாற்றாற்றல் கொண்டோர் அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கருத்தமர்வில் தேசிய சமாதானப்பேரவையின் ஊடகவியலாளர் உப குழு, பெண்கள் உப குழு, இளைஞர் உப குழு, உள்ளூர் அரசியல்வாதிகள் உபகுழு, மாற்றுத் திறனாளிகள் உப குழு ஆகியவற்றின் பிரதி நிதிகள் கலந்துகொண்டனர்.

தற்போதைய சூழலில் நாட்டில் உள்ள அரசியல் குழப்ப சூழ்நிலைகள், சட்டச் செயற்பாடுகள், 19 ஆவது திருத்தம், ஜனாதிபதியின் அதிகாரங்கள் போன்றவை பற்றித் தெளிவாக கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்தக் கருத்தமர்வின் போது தற்போது இலங்கை நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வரும் பல்வேறு அரசியல் பிரச்சினைகள் மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. (ஐ)

## தேர்தலை வலியுறுத்தி மஹிந்த அணி நாடளாவிய ரீதியில் போராட்டங்கள்

### ஐ.தே.கவுக்குப் போட்டியாக களமிறக்கம்



கொழும்பு, நவ. 23

நாட்டின் தற்போதைய அரசு அரசமைப்புக்கு விரோதமானதெனத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி நாடெங்கும் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த அறிவித்துள்ள நிலையில், தேர்தலை வலியுறுத்தி மஹிந்த அணி நாடாளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் போராட்ட அறிவிப்பைத் தொடர்ந்து கொழும்பில் கூடிய பிரதமர் மஹிந்த தலைமையிலான அணியினர், இந்தத் தீர்மானத்தை எடுத் துள்ளனர் என அரசியல் வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

அதுமாத்திரமன்றி நாடளாவிய ரீதியில் மக்கள் சந்திப்புகள் மற்றும் கருத்தரங்குகளையும் நடத்தி மக்களுக்கு விளக்கமளிக்கவும் மஹிந்த தரப்பு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் ஏற்பட்ட முரண்பாடுகள் வலுப்பெற்று கடந்த 9ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரி நாடாளுமன்றத்தைக் கலைத்தார். இதற்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ள நிலையில், எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படவுள்ளது.

தற்போதைய நிலையில், தேர்தலுக்குச் செல்வதே ஒரே வழியென பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர். இந்நிலையில், இரு தரப்பினரும் தேர்தலுக்கான ஏற்பாடுகளில் தீவிரமாகச் செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## மோசமான வீதிகளால் பாதிக்கப்படும் மக்கள்

கிளிநொச்சி, நவ. 23


கிளிநொச்சி மாவட்ட உள்ளக வீதிகளில் 90 வீதமானவை மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறான வீதிகளால் நாளாந்தம் பல்வேறு தேவைகளுக்காக பயணம் செய்கின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் பாண் வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவரின் ஓட்டோ வீதியில் மழை நீர் தேங்கி நின்ற குழியினுள் சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட பல ராத்தல் பாண்கள் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்தி பொருட்கள் சேற்று நீரினுள் வீழ்ந்ததால் அவருக்கு பல ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டது.

இதுபோன்று பலவீதிகள் குன்றும் குழியுமாக காணப்படுகின்றமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ)



## 29 ஆம் திகதி வாக்கெடுப்பில் உங்கள் பலத்தைக் காட்டுங்கள்!

### மஹிந்தவுக்கு சவால் விடுக்கிறார் ரணில்

எதிர்வரும் 29ஆம் திகதி நாடாளுமன்றில் முன் வைக்கப்படவுள்ள பிரதமர் செயலகத்துக்கான நிதியொதுக்கீட்டை நிறுத்தும் பிரேரணையைத் தோற்கடித்துக் காட்டுமாறு மஹிந்த அணிக்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க சவால் விடுத்துள்ளார்.

தற்போதைய அரசு அரசமைப்புக்கு முரணானதென்றும், பிரதமர் நியமனம் செல்லுபடியாகாதென்றும் ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது. அந்த வகையில் புதிய பிரதமர் செயலகத்துக்கான நிதியொதுக்கீட்டை நிறுத்தும் பிரேரணையை எதிர்வரும் 29ஆம் திகதி நாடாளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளது. இது குறித்து நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஏற்கனவே கொண்டுவரப்பட்ட பிரேரணைகள் யாவும் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், தற்போது அரசோ அமைச்சரவையோ கிடையாது.

எனினும், நாடாளுமன்றில் குழப்பத்தை விளைவித்து உண்மையை மறைக்கும் செயற்பாட்டில் எதிர்த்தரப்பினர் ஈடுபடுகின்றனர். இதனை விடுத்து, முடிந்தால் எதிர்வரும் 29 ஆம் திகதி முன் வைக்கவுள்ள பிரேரணையைத் தோற் கடித் துக் காட்டுங்கள்– என்றார்.

எவ்வாறாயினும், நிதி தொடர்பான பிரேரணைகளை முன்வைக்கும் அதிகாரம் ஐக் கிய தேசியக் கட்சிக்கு இல்லையென ஆளுந்தரப்பு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்திய அணியை எதிர்கொள்ள பலம் பொருந்திய ஆஸி. அணி



இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள, ஆஸ்திரேலிய அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்தியா அணி, 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இந்நிலையில் இந்த தொடரின் முதல் இரு டெஸ்ட் போட்டிகளுக்கான ஆஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் முறையாக 14 வீரர்கள் கொண்ட அணியை அறிவித்துள்ள கிரிக்கெட் ஆஸ்திரேலியா, டிம் பெய்னை அணித்தலைவராக நியமித்துள்ளது.

அடிலெய்ட் மற்றும் பெர்த் டெஸ்ட் போட்டிகளுக்கு இந்த 14 வீரர்கள் கொண்ட அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

விக்டோரியாவைச் சேர்ந்த ஆரம்ப துடுப்பாட்ட வீரரா மார்கஸ் ஹாரிஸ் முதல் முறையாக தேசிய அணியில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் கடினமான உள்நாட்டுக் கிரிக்கெட் தொடரான ஷெபீல்ட் ஷீல்ட் கிரிக்கெட் தொடரில், இந்த சீசனில், மார்கஸ் ஹாரிஸ் 87.40 என்ற சராசரி வைத்துள்ளார்.

மேட் ரென்ஷா மீண்டும் அணிக்குள் நுழைவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

வேகப்பந்து வீச்சாளர்களான கிறிஸ் ட்ரிமெய்ன் மற்றும் பீட்டர் சிடில் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மிட்செல் ஸ்டார்க், ஹசில்வுட், பாட் கமின்ஸ், நாதன் லியோன் ஆகிய 4 பந்து வீச்சாளர்களே டெஸ்ட் போட்டியில் விளையாடுவார்கள் என்ற நிலையில், கூடுதலாக இரு வேகப்பந்து வீச்சாளர்களையும் கிரிக்கெட் ஆஸ்ரேலியா தேர்வு செய்துள்ளது.

மார்கஸ் ஹாரிஸ், ரென்ஷாவை விட முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளார், ரென்ஷா இரண்டாவது ஆண்டாகத் தொடர்ந்து ஆஸ்திரேலிய அணியில் தேர்வு செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளார். பீட்டர் ஹேண்ட்ஸ்கம்ப் நடுத்தர வரிசையை வலுப்படுத்தச் சேர்க்கப்பட்டுள்ளார். ட்ராவிஸ் ஹெட்டும் அணிக்கு திரும்பியுள்ளார். காயத்திலிருந்து மீண்ட உஸ்மான் கவாஜா அணியில் இடம்பெற்றுள்ளார்.

டிம் பெய்ன் தலைமையிலான அணியில், மார்கஸ் ஹாரிஸ், ஆரோன் பிஞ்ச், உஸ்மான் கவாஜா, ஷோன் மார்ஷ், ட்ராவிஸ் ஹெட், மிட்செல் மார்ஷ், பாட் கமின்ஸ், மிட்செல் ஸ்டார்க், ஜோஷ் ஹேசில்வுட், நேதன் லியோன், கிறிஸ் ட்ரிமெய்ன், பீட்டர் சிடில், பீட்டர் ஹேண்ட்ஸ்கம்ப் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# 20 வருட உதைபந்து வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார் டிடியர்

ஐவரிகோஸ்ட் தேசிய உதைபந்து அணியின் முன்னாள் வீரரான டிடியர் ட்ரோக்பா, தனது 20 வருட உதைபந்து வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

தேசிய உதைபந்து அணிகளையும் தாண்டி, பிரபல கழக அணிகளுக்கு விளையாடி பல வெற்றிகளுக்கு துணை நின்ற 40 வயதான டிடியர் ட்ரோக்பா, அனைத்து வித உதைபந்துப் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இறுதியாக அமெரிக்க கழக அணியான, பீனிக்ஸ் ரைசிங் எப்சி, அணிக்கு விளையாடி வந்த நிலையிலேயே, டிடியர் ட்ரோக்பா, இந்த ஓய்வு அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு பீனிக்ஸ் ரைசிங் எப்சி அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட அவர், இதுவரையான காலப்பகுதியில் 22 போட்டிகளில் விளையாடி 14 கோல்களை அடித்துள்ளார்.

மத்திய முன்கள வீரரான டிடியர் ட்ரோக்பா, கடந்த 2002ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை ஐவரி கோஸ்ட் தேசிய உதைபந்து அணிக்காக 104 போட்டிகளில் விளையாடி 65 கோல்களை அடித்திருந்தார்.

அதன் பிறகு கழக அணிகளில் விளையாட ஆர்வம் காட்டிய அவர், 1998 ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரை பிரான்ஸின் லீ மான்ஸ் கழக அணிக்காக விளையாடினார். அவர் 64 போட்டிகளில் விளையாடி 12 கோல்களை அடித்தார்.

இதனைதொடர்ந்து, பல கழக அணிகளுக்கு விளையாடிய டிடியர் ட்ரோக்பா, இங்கிலாந்தின் பிரபல கழக அணியான செல்சியா கழக அணிக்கு விளையாடித் தனக்கான சிறந்தொரு இடத்தை பிடித்துக்கொண்டார்.

2004ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை செல்சியா கழக அணிக்காக விளையாடிய அவர், 226 போட்டிகளில் விளையாடி 100 கோல்களை அடித்தார்.

அதன் பிறகு இரண்டு கழகங்களுக்கு மாறி மீண்டும், தனக்கு பெயர் வாங்கி கொடுத்த செல்சியா கழக அணிக்கே நுழைந்த ட்ரோக்பா, 2014 ஆம் ஆண்டு முதல் முதல் 2015ஆம் ஆண்டு வரை 28 போட்டிகளில் விளையாடி 4 கோல்களை அடித்தார்.

இதுவரை ஒட்டுமொத்தமாக கழக அணிகளுக்காக 497 போட்டிகளில் விளையாடி 210 கோல்களை அடித்துள்ளார் ட்ரோக்பா.

ட்ரோக்பா செல்சியா கழக அணிகளுக்காக விளையாடிய காலகட்டத்தில், அந்த அணிக்காக ஒரு சம்பியன் லீக் கிண்ணம், நான்கு பிரீமியர் லீக் கிண்ணம், நான்கு எப். ஏ கிண்ணம் ஆகிய ஒன்பது கிண்ணங்களை பெற்றுக் கொடுக்க காரணமாக இருந்துள்ளார்.

இதுதவிர இரண்டு முறை ஆபிரிக்காவின் சிறந்த வீரருக்கான விருதுகளும், நான்கு முறை அதிக கோல்கள் அடித்த வீரருக்கான விருதுகளையும் வென்றுள்ளார்.(ஐ)

# ஆஸி. துடுப்பாட்டப் பயிற்சியாளராக முன்னாள் வீரர்களை நியமியுங்கள்!



ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளராக, முன்னாள் வீரர்களை நியமிக்குமாறு, முன்னாள் சுழற்பந்து ஜாம்பவானான ஷேன் வோர்ன் வலியுறுத்தியுள்ளார்.

ஐந்து முறை உலகக்கிண்ணத்தை ஏந்திய ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணி, தற்போது பல்வேறு காரணங்களால் நிலைகுலைந்து போயுள்ளது.

அத்தோடு அடுத்தடுத்து பல தோல்விகளையும் சந்தித்து, காரசாரமான விமர்சனங்களுக்கும் உள்ளாகியுள்ளது.

இந்நிலையில், தற்போதைய துடுப்பாட்ட பயிற்சியாளரான இங்கிலாந்தின் கிரேம் ஹிக்கை நீக்கவேண்டிய நேரம் வந்து விட்டதாகவும், அவருக்குப் பதிலாக முன்னாள் வீரர்களான ரிக்கி பொண்டிங் மற்றும் மார்க் வோவ் ஆகியோரைக் கொண்டு வாருங்கள் என சுழற்பந்து ஜாம்பவான் ஷேன் வோர்ன் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

ஆஸ்திரேலிய கிரிக்கெட்டில் கடந்த 25-30 ஆண்டுகளாக மிகப்பெரிய வீரர்கள் இருந்துள்ளனர். கிரேம் ஹிக் கடந்த சில ஆண்டுகளாக இருந்து வருகிறார். ஆனால் துடுப்பாட்ட வீரர்கள் செய்த தவறுகளையே மீண்டும் மீண்டும் செய்கின்றனர்.

மாற்றவேண்டிய நேரம் இதுவே. மார்க் வாஹ், ரிக்கி பொண்டிங், மைக்கல் கிளார்க், மைக் ஹஸ்ஸி, ஆகியோர் நிச்சயம் துடுப்பாட்ட பயிற்சியாளர் பொறுப்புக்கு அவசியம். பந்து வீச்சில் கிளென் மெக்ராத் என்று நம்மிடையே சிறந்த பந்து வீச்சாளர்கள் உள்ளனர். இவ்வாறு நிறைய வாய்ப்புகள் உள்ளன' எனக் கூறியுள்ளார்.

இறுதியாக 24, மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடிய ஆஸ்திரேலியா அணி, 18 போட்டிகளில் தோல்வி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்டீவ் ஸ்மித், வோர்னர், பன்கிராப்டுக்கு விதிக்கப்பட்ட தடையை அடுத்து, சரிவை நோக்கிச் செல்லும் ஆஸ்திரேலியா அணி, அதன் பிறகு விளையாடிய அனைத்துத் தொடர்களிலுமே படுதோல்வியைச் சந்தித்தது.

இதனையடுத்து அந்த வீரர்களை அணிக்குள் உள்வாங்க வேண்டுமென கோரிக்கைகள் வலுத்த போதும், கிரிக்கெட் ஆஸ்திரேலியா சபை திட்டவட்டமாக அதற்கு மறுப்பு தெரிவித்தது. அத்தோடு கிரிக்கெட் ஆஸ்திரேலியா சபையில் உள்ள பல முக்கிய அதிகாரிகளும் தங்களது பதவிகளை இராஜினாமா செய்தனர்.

தற்போது எதிர்வரும் உலகக்கிண்ணத் தொடருக்கு முன்னர், அவுஸ்ரேலிய அணியை மீட்டெடுக்கும் கட்டமாக அணியின் முன்னாள் வீரர்கள் பல யோசனைகளை முன்வைத்து வருகின்றனர். இதற்கு கிரிக்கெட் ஆஸ்திரேலியா சபை, செவி சாய்க்குமா என பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.



## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நாட்டு மக்கள் அங்கீகாரம் வழங்குகிறார்களா என்று தேடிப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இப்போது கிடைத்திருக்கிறது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டின் அரசமைப்பில் உள்ள கால அட்டவணையின்படி பதவியில் இருக்கும் ஜனாதிபதி, பதவிக்கு வந்து நான்கு வருடங்களுக்கு பிறகு முன்கூட்டியே ஒரு தேர்தலை நடத்தி, புதிய மக்களை ஆணையைக் கோரும் உரிமையைக் கொண்டுள்ளார். ஆகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்திப் புதிய மக்கள் ஆணையைத் தேடிப்பெற வேண்டும் எனவும் அவர் கூறினார்.

அலரி மாளிகை வளாகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாம் பொதுத் தேர்தலுக்கு தயாராக இருக்கிறோம். ஆனால், அது நியாயமாக நடைபெறவேண்டும். இவர்களின் காபந்து அரசு பலத்தின் கீழ் அது நடைபெற முடியாது. அதற்கு ஒரு கால அட்டவணை உள்ளது. பொதுவாக எல்லாத் தேர்தலுக்கும், தேர்தல் கால அட்டவணைகள் உள்ளன. அதன்படி பார்த்தால், பொதுத் தேர்தலை விட, ஜனாதிபதித் தேர்தலுக்குதான் இன்று இடம் இருக்கிறது. ஆகவே முடியுமானால், அவசியமானால் ஜனாதிபதித் தேர்தலுக்குப் போங்கள்.

அரசமைப்பு தெளிவாக இருக்கிறது. ஜனாதிபதியே, உங்களுக்கு தேர்தலுக்குப் போக முடியும். உங்கள் செயற்பாடுகள் பற்றி உங்களுக்கு அந்தளவு நம்பிக்கை இருந்தால், மக்களிடம் போய் புதிய மக்கள் ஆணையைக் கோருங்கள். உங்கள் செயன்முறைகள் திருப்தியான வைகளாக இருந்தால், மக்கள் உங்களுக்குவாக்கு அளிக்கட்டும். அதை நாம் ஏற்றுக்கொள்வோம்.

நீங்கள் இன்று இருக்கும் இடத்தில் உள்ள தலைமை ஆசிரியரின் மகன், தமது கட்சியிலே உங்களுக்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நியமனம் தருவதாக இருந்தால், அது உங்கள் நடத்தையிலேயே தங்கி உள்ளது என்று கூறுகிறார். பாடசாலை வகுப்புகளில் நமது மாணவர்களின் நடத்தைப் புத்தகம் இருப்பதை போன்று, நீங்களும் உங்கள் நடத்தையால், அதிக புள்ளிகள் பெற்றால்தான் உங்களால் அவர்களது ரிக்கட்டை வாங்கிப் போட்டியிட முடியும். மிளகாய் நிறமான சிவப்பு நிறத்துடன் கூடிய நட்சத்திரப் புள்ளிகளை நீங்கள் பெற்றால்தான், உங்களுக்கு நியமனம் தருவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

உங்களுக்கு ஏன் இந்தச் சிரமம்? அடுத்த வருட ஆரம்பத்தில் நீங்களே போட்டியிட வழி வகுக்கும் ஜனாதிபதித் தேர்தல் வருகிறது. உங்களால் முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவிக்க முடியும். நாங்களும் போட்டியிடுவோம். உங்களுக்கு நாம் உதவியும் செய்யலாம். எமது தரப்பில் யார் போட்டியிடுவார் என நாம் இப்போது சொல்ல முடியாது. எம் மனதில் இரண்டொருவர் இருக்கிறார்கள் – என்றார். (ஐ)

## இப்போது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றைக் கலைக்கும் உத்தரவைக் கடந்த 9ஆம் திகதி நள்ளிரவு ஜனாதிபதி வழங்கியிருந்தார். அது தொடர்பான வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் உயர் நீதிமன்றம் சென்று இடைக்காலத் தடை உத்தரவைப் பெற்றிருந்தன.

இந்த நிலையில் நாடாளுமன்றைக் கலைக்கும் உத்தரவை ஜனாதிபதி மீளப்பெற உள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

அதனை உறுதிப்படுத்தும் வகையில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவும் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள சுதந்திர ஊடக நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கின்றது. அதனை நாங்கள் தேவை ஏற்படும்போது காட்டத் தயாராக இருக்கின்றோம். 120 உறுப்பினர்களுக்கும் அதிகமானவர்கள் எங்களுடன் இருந்தனர். என்றாலும் நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்ததால் மீண்டும் அவர்கள் தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு இருந்த இடங்களுக்குச் சென்றனர். ஆனால் தற்போது எங்களுக்குப் பெரும்பான்மை இருக்கின்றது.

அதனால் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் நிலைப்பாட்டை நீக்கிக்கொள்ளுமாறு ஜனாதிபதிக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் மஹிந்த தலைமையிலான அரசு அடுத்த இரண்டு வருடங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லாமல் முன் செல்லும். அத்துடன் 2020ஆம் ஆண்டே நாடாளுமன்றத் தேர்தலொன்றுக்குச் செல்வோம் – என்றார். (ஐ)

## விவசாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெலியத்த பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

அரசு பொறுப்பேற்றபோது, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்திருந்தன. அனைத்து மட்டத்திலும் வரி அறவிடப்பட்டது. அவற்றுக்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

விவசாயத்திற்கு முக்கிய இடமளித்து அவற்றுக்கான வரிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த வாரம் முதல் அதற்கான பணிகள் இடம்பெறும். அத்துடன், வரிகளுக்கு ஐந்து வருட கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.

கடந்த அரசிலும் பார்க்க சிறந்த பொருளாதார நிலையில் தற்போது நாடு உள்ளது – என்றார்.

## நாடாளுமன்றக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானி அறிவித்தலுக்கு உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இது குறித்தான அடுத்த கட்ட விசாரணைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் சட்டமா அதிபர், ஜனாதிபதியின் சார்பில் வாபஸ் பெறும் முடிவை உயர்நீதிமன்றத்தில் அறிவிக்கக்கூடும் என தெரியவருகின்றது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியால் எடுக்கப்பட்ட முடிவு தவறானது என்றே உயர்நீதிமன்றத் தீர்ப்பு அமையும் எனச் சட்ட நிபுணர்கள் ஆலோசனை வழங்கியுள்ள நிலையிலேயே, தமது உத்தரவை வாபஸ் பெற மைத்திரி முடிவெடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## போதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியினால் நேற்று வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்புகளை அடிப்படையாகக் கொண்டு கட்சித் தலைவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நீதிமன்ற விசாரணைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கருத்து தெரிவிப்பதற்கு அதற்கான பூரண அறிவைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், இவ்விடயங்களில் கட்சி உறுப்பினர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நேற்று வியாழக்கிழமை விவாதம் ஒன்று நடைபெற்றது.

'மனித உரிமைகள் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை பாதுகாப்பதில் இலங்கை நாடாளுமன்ற வகிபாகம்' எனும் தலைப்பில் நடந்த மாநாட்டில் மாற்றுக்கொள்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய இலங்கை அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராகக் கொண்ட அரசை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதுடன், பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதாகும்.

அத்தோடு தற்போதைய அரசியல் நெருக்கடியானது வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், சுய தணிக்கை, நீதிக்கு புறம்பான கொலைகள் போன்ற கடந்த காலத்தில் பரவலாகக் காணப்பட்ட கலாச்சாரத்துக்கு வழிகோலும் வகையில் காணப்படுகின்றது – என்றார். இந்த விவாதம் இன்றும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்து, சுயாதீனமாகச் செயற்பட முடிவெடுத்திருந்த பௌசி மீண்டும் மஹிந்த அணியுடன் சங்கமிக்க முடிவெடுத்துள்ளார்.

இதற்காக அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை அவர் பேரமாக முன்வைத்துள்ளார். இதற்கு மைத்திரி தரப்பில் பச்சைக்கொடி காட்டப்பட்டதையடுத்தே 'பல்டி'க்கு அவர் தயாராகியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அழிக்கும் முயற்சியில் மஹிந்த செயற்படுகிறார். அதற்கு மைத்திரியும் துணைபோகிறார் என குறிப்பிட்டு, அதற்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் ரணிலுடன் கைகோர்த்த பௌசியும், பியசேன கமகேயும், சு.கவின் சுயாதீன உறுப்பினர்களாகச் செயற்படவுள்ளனர் என அறிவித்தனர்.

இந்நிலையிலேயே, பௌசி மனம்மாறி, மஹிந்தவுடன் கரம் கோர்க்கவுள்ளார். இன்று நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சி வரிசையில் அவர் அமரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றார்.

அவர் மீது நம்பிக்கை கொண்டிருந்த நாட்டு மக்களின் நலனை அதிகாரத்தின் ஊடாகச் சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றார் என ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தொடர்ந்து வருகின்ற அரசியல் குழப்பநிலை உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச மட்டத்திலும் பல்வேறு எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே சமந்தா பவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## அளவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி யகுசி அகாசி தெரிவித்துள்ளார். கொழும்பு ஆங்கில வாரம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

விடுதலைப்புலிகளின் தலைவரைச் சந்திப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. 2003ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நான் பிரபாகரனை சந்தித்தேன். அது நீண்ட சந்திப்பு. சமாதானத்துக்கான வாய்ப்புகள் மற்றும் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமாதானம் குறித்து நீண்ட நேரம் பேச்சுக்களில் ஈடுபட்டோம்.

நான் அப்போது காணப்பட்ட வாய்ப்பைப் பயன்படுத்துமாறு பிரபாகரனைக் கடுமையாக வலியுறுத்தினேன். எனினும், பிரபாகரன் சமாதானப் பேச்சுக்களை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்பதை பின்னர் நான் உணர்ந்தேன்.

எங்கள் சந்திப்புக்கு பின்னர் நாங்கள் ஒன்றாக மதிய உணவருந்தினோம். அப்போது பிரபாகரன் சற்று இயல்பான நிலையில் காணப்பட்டார். காலையில் இடம்பெற்ற பேச்சுக்கள் தீவிரமானவையாகவும் உத்தியோகபூர்வமானவையாகவும் இருந்தன. மதிய உணவுக்குப் பின்னர் நாங்கள் உத்தியோகபூர்வமற்ற பேச்சுக்களில் ஈடுபட்டோம். பிரபாகரன் தனது மகன், தனது குடும்பம், தனது எதிர்பார்ப்புகள் குறித்து குறிப்பிட்டார்.

பிரபாகரன் தனக்கு வழங்கப்பட்ட பல சந்தர்ப்பங்களைத் தவறவிட்டார் என்பது குறித்து நான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன். விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்தத்துக்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் அதற்காக என்னை தொடர்பு கொண்டனர். தான் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்தவர் எனத் தெரிவித்து என்னை நபர் ஒருவர் தொடர்புகொண்டார்.

நான், வெறுமனே யுத்த நிறுத்தம் மாத்திரம் போதுமானதல்ல, ஆயுதங்களைக் கைவிட வேண்டும், பொதுமக்களை விடுவிக்கவேண்டும் என அவரிடம் தெரிவித்தேன். அவர் எனது நிலைப்பாட்டைப் பிரபாகரனிடம் தெரிவித்த பின்னர் என்னை தொடர்புகொள்வார் எனத் தெரிவித்தார். ஆனால் பின்னர் என்னை அவர் தொடர்புகொள்ளவில்லை.

அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் மற்றும் சர்வதேச மோதல்கள் குறித்த அனுபவமிக்கவர்களின் ஆலோசனைக்கு ஏற்ப விடுதலைப்புலிகள் பேச்சுக்களுக்கான வாய்ப்புள்ளதா என ஆராய்ந்தனர். எனினும் பிரபாகரனின் மனது யுத்தவெறிகளால் நிரம்பியிருந்தது. அவர் அளவுக்கதிகமான தன்னம்பிக்கை கொண்டிருந்தார் என நான் நினைக்கிறேன் – என்றார். (ஐ)

## ரூ.1,000...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கான அறிவிப்பைப் பகிரங்
கமாக விடுத்தால் மலையகத்தி
லுள்ள மூன்று எம்.பிக்களை
அழைத்துவருவேன்

இவ்வாறு மைத்திரி, மஹிந்த
கூட்டணியிடம் எடுத்துரைத்துள்
ளார் இலங்கைத் தொழிலாளர்
காங்கிரஸின் தலைவரும், அமைச்
சருமான ஆறுமுகன் தொண்ட
மான்.

தெற்கு அரசியல் களத்தில்
பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ள
நிலையில், எம்.பிக்களை
வளைத்துபோடும் முயற்சியில்
மஹிந்த அணி தீவிரமாக
இறங்கியுள்ளது. ஜனாதிபதி
மைத்திரியும் நேரடியாகவே
களமிறங்கியுள்ளார்.

பெரும்பான்மையை நிரூ
பிப்பதற்குரிய ஆதரவைத் திரட்டி
தருமாறு தொண்டமானிடமும்
உதவி கோரப்பட்டுள்ளது. அவ்
வேளையிலேயே, தோட்டத்
தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா
சம்பளம் வழங்கப்படும் என்ற
உத்தரவாதம் அளிக்கப்படுமா
னால், அதற்குரிய நடவடிக்கை
யில் நான் இறங்குவேன். அதைக்
காரணம் காட்டி எம்.பிக்களை
யும் அழைத்து வருவேன். இல்
லாவிட்டால் மக்கள் எதிர்ப்புக்கு
அஞ்சி எவரும் வரமாட்டார்கள்
என்று தொண்டமான் குறிப்பிட்
டுள்ளார்.

அதேவேளை, பெருந்தோட்
டத் தொழிலாளர்களுக்கு அடிப்
படைச் சம்பளத்தை ஆயிரம்
ரூபாவாக அதிகரிக்காவிட்டால்,
மலையகத்தில் வாக்குவேட்டை
நடத்தமுடியாது என்றும், தமக்
கான செல்வாக்கிலும் அது தாக்
கத்தை செலுத்திவிடும் என்றும்
தொண்டா தெரிவித்துள்ளார்.
இதற்கு மஹிந்த தரப்பிலிருந்து
பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ள
தாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்புச் செயலர் ஹேமசிறி
பெர்னான்டோவைச் சந்தித்து
தனித்தனியாகப் பேச்சுக்களை
நடத்தியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இந்தச்
சந்திப்புக்கள், பாதுகாப்பு அமைச்
சில் இடம்பெற்றுள்ளன.

இந்தியத் துணைத் தூதுவர்
கலாநிதி ஷில்பக் அம்புலே தலை
மையிலான இந்தியத் தூதரக
உயர் அதிகாரிகள், இலங்கை
பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி
பெர்னான்டோவுடன் நடத்திய
பேச்சுக்களின்போது, இருதரப்ப
முக்கியத்துவம் வாய்ந்த விவகா
ரங்கள் குறித்துக் கலந்துரை
யாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் இந்தியத்
தூதரகப் பாதுகாப்பு ஆலோசகரும்
கலந்துகொண்டார்.

அதேவேளை, புதிதாகப்
பதவியேற்ற அமெரிக்க தூதுவர்
அலய்னா ரெப்லிட்சும், கடந்த தி
ங்கட்கிழமை, இலங்கை பாதுகாப்
புச் செயலர் ஹேமசிறி பெர்
னான்டோவைச் சந்தித்து இரு
தரப்பு உறவுகள் மற்றும் முக்கி
யத்துவம் வாய்ந்த விடயங்கள்
குறித்து பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அமெரிக்க
துணைத் தூதுவர் மற்றும்
பாதுகாப்பு ஆலோசகர் உள்ளிட்ட
அதிகாரிகளும் பங்கேற்றனர்.

ரணில் – மைத்திரி கூட்டு
அரசுடன் அமெரிக்காவும் இந்தி
யாவும் நெருக்கமான பாதுகாப்பு
உறவுகளை ஏற்படுத்தியிருந்தன.

தற்போது, ஏற்பட்டுள்ள அரசி
யல் குழப்பங்களினால், இந்த
உறவுகள், ஒத்துழைப்புகளின்
நிலைகேள்விக்குள்ளாகியிருக்கிறது.

அமெரிக்காவும், இந்தியாவும்
மஹிந்த அரசுடன் தொடர்புகளை
ஏற்படுத்திக் கொள்ளாத நிலை
யில், மைத்திரிபால சிறிசேன
வினால் அண்மையில் நியமிக்
கப்பட்ட பாதுகாப்புச் செயலர்
ஹேமசிறி பெர்னான்டோவு
டன், இரு தரப்பு பாதுகாப்பு
உறவுகள், திட்டங்களின் எதிர்
காலம் குறித்தே பேச்சுக்களை
நடத்தியிருக்கின்றன. (ஐ)

# பிரிட்டனில் தஞ்சம் கோரும் இலங்கையர் விண்ணப்பங்களை நிராகரிக்கவேண்டாம்

## அந்நாட்டு நிழல் வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்து

லண்டன், நவ. 23

இலங்கையர்கள் பல ஆபத்தான சூழலை எதிர்கொண்டுள்ளனர். எனவே லண்டனில் புகலிடம் கோரியுள்ள இலங்கையர்களின் விண்ணப்பங்களை நிராகரிப்பதை இடைநிறுத்துமாறும் புகலிடக் கொள்கையை மீளாய்வு செய்யுமாறும் பிரிட்டன் உள்நாட்டு அலுவலகத்திடம் வலியுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு பிரிட்டன் தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நிழல் வெளிவிவகார அமைச்சருமான லிஸ் மைக்கின்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சட்டபூர்வமான முறைப் படி பிரதமர் ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்துகின்றேன்.

பிரிட்டனில் புகலிடம் கோரிய இலங்கையர்களின் விண்ணப்பங்களை நிராகரிப்பதை இடைநிறுத்துமாறும் புகலிடக் கோரிக்கையாளர்களின் கொள்கையை பிரிட்டன் உள்நாட்டு அலுவலகம் மீளாய்வு செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தி யுள்ளேன். – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# மிளகாய்த்தூள் தாக்குதல்: பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, நவ. 23

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் மஹிந்த அணியினரால் நடத்தப்பட்ட மிளகாய்த் தூள் தாக்குதலுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளார்.

இது மிகவும் கவலைக்குரிய சம்பவம். மிளகாய்த் தூள் எனது முகத்திலும் வீசப் பட்டது. எனது கண்களை மூடுவதற்குக் கூட எனக்கு நேரம் கிடைக்கவில்லை. எவ்வளவு வேதனையை அனுபவித்தேன் என்பதைத் தெரிவிக்கக் கூட என்னால் முடியவில்லை. இந்த நாட்டில் ஊழல் மற்றும் மோசடியை முடிவுக்குக் கொண்டுவருவதாக நான் உறுதிமொழி எடுத்துள்ளேன். நாடாளுமன்றம் மதிப்புக்குரிய இடம். அதன் காரணமாகவே நான் முறைப்பாட்டைப் பதிவு செய்கின்றேன். தாக்குதல் நடத்தியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என நான் நம்புகின்றேன் – என்று காமினி ஜயவிக்கிரம பெரேரா எம்.பி. தெரிவித்துள்ளார். (ஐ)

# பிரதமரின் நிதி ஒதுக்கீட்டை இடைநிறுத்தும் பிரேரணையை விவாதிக்க விடவேமாட்டோம்

## அமைச்சர் எஸ்.பி. விடாப்பிடி



கொழும்பு, நவ. 23

பிரதமரின் செயலாளரின் நிதி ஒதுக்கீட்டை இடைநிறுத்தும் பிரேரணை 29ஆம் திகதி விவாதத்துக்கு எடுக்கப்பட மாட்டாது. அதற்கு இடமளிக்கப் போவதில்லை என ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் எஸ்.பி திசநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நிதி தொடர்பான பிரேரணை சபை முதல்வரினாலோ அல்லது அமைச்சர் ஒருவரினாலே தான் கொண்டுவர முடியும். எதிரணிக்கு இவ்வாறான பிரேரணையைக் கொண்டுவர முடியாது.

கடந்த தினங்களில் சட்டவிரோதமாக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து அமைச்சரவை கலைந்துவிட்டதாக அறிவித்தார்கள்.

அதன் அடிப்படையிலே இந்தப் பிரேரணையை கொண்டு வந்துள்ளனர். ஒழுங்குப் புத்தகத்தில் இந்தப் பிரேரணை உள்ளடக்கப்பட்டாலும் அதனை விவாதத்திற்கு எடுப்பது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே முடிவு செய்யும். அந்தக் குழு விரைவில் நியமிக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்ற நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படும். – என்றார். (ஐ)

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



அமரர்

## கனகரத்தினம் சண்முகநாதன் (சண்) (கட்டட நிர்மாணக் குபேரன்)

மண்ணில் 07.04.1950

விண்ணில் 24.10.2018

ஊரெழுவில் உயிராகி, உயர்வான பண்புடன் வாழ்வாங்கு வாழ்ந்த எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய "சண்" அவர்கள் 24-10-2018 இல் அமரத்துவம் அடைந்துள்ளார். சிலவாரங்களாக மட்டுமே சுகவீனமுற்றிருந்த அவர் இறைவனின் திருப்பாதங்களை அடைந்துவிட்டார். இவர் ஊரெழு கிழக்கில் அமைந்துள்ள "JEYASUNJAN CONSTRUCTION" நிறுவனத்தின் உரிமையாளர் ஆவார்.

இவரின் கட்டட நிர்மாணச் சிறப்பிற்கும், ஆற்றலுக்கும் கட்டியம் கூறும் வகையில் எமது தேவஸ்தானத்தில், சிற்பதேர் தரிப்பிடமும் தேர் மேடை அமைப்பும் (2012), தீர்த்தக்கேணி அமைப்பு(20 13), பெரும் திருமணமண்டபம்(2015), நீர்த்தாங்கி (2015), தேவஸ்தானம் முழுவதுமான புனரமைப்பும் வர்ணவேலையும் (2018), ஏழு கலசங்கள் கொண்ட தூபி உடன் அமைந்த வசந்தமண்டபம்(2018), ஆகியன சான்றாக விளங்குகின்றன.

உரிய நிர்மாண நிதி தேவஸ்தானத்தால் வழங்கப்படுவது ஒருபுறம் இருக்க, உரிய நேரத்தில், நிர்ணயித்த இலக்குத் திகதியுள், முற்பணம் கூட எதிர்பார்க்காது அன்னார் இவ்வேலைகளை நிறைவேற்றி தருவதும், தந்ததும், அவருக்கே உரிய சிறந்த பண்பாகும்.

தன் கீழ் தொழில் புரிவோர், மேற்பார்வையாளர்கள் ஆகியோரைக் கையாளும் அதிகாரமும், ஆளுமையும், அன்பும், பாசமும் கொண்ட பண்பு அவருக்கே உரியதாகும். 'வேலை முதல், முதல்(பணம்) பின்' – என்ற பாங்குடன் எம்மோடு அவர் ஒத்து இயங்கிய மாண்பினை நாம் என்றும் மறந்துவிட முடியவில்லையே – மாமனிதரே உங்கள் சிரிப்புடன் கூடிய அந்த சிங்கார முகந்தனை!

உங்கள் நினைவிற்குச் சான்றாக இந்த கட்டடங்கள் யாவும் எம் தேவஸ்தான வளாகத்தில் எழுந்து நிற்கின்றனவே, அவற்றைப்பார்த்து ஆறுதல் அடைவோமாக.

உங்கள் அன்பு மனைவி, தனயன் இருவரும் துயருறும் இச்சந்தர்ப்பத்தில், எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி!

இங்ஙனம்
துரைசிங்கம். ரகு
கௌரவ செயலாளர்
தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன்
தேவஸ்தான பரிபாலனசபை.

# வெலிக்கடைப் படுகொலைச் சந்தேகநபர் மீண்டும் பொலிஸ் சேவையில் இணைப்பு

கொழும்பு, நவ. 23

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய, நேற்று முன் தினம் முதல் அவர் தனது கடமையைச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.



போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் 2018 ஆண்டு மார்ச் 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். 2012 ஆம் ஆண்டு வெலிக்கட சிறைச்சாலையில் 27 சிறைக் கைதிகள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நியோமல் ரங்கஜீவ கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுப்படி 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் 28 ஆம் திகதி நியோமல் ரங்கஜீவ பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக் கிழமையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு சென்று கையொப்பமிடவும் உத்தரவிட்டுள்ளது, அத்துடன் அவருக்கு வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டதுடன், கடவுச்சீட்டை நீதிமன்றின் பொறுப்பில் எடுக்கவும் நீதிவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இருபத்து மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 . 11 . 1941



மறைவு 23 . 11 . 1995



தோற்றம் 18 . 08 . 1983

அமரர் கனகசபை சண்முகசுந்தரம் (ஸ்தாபகர் சிவன் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்)

அமரர் சண்முகசுந்தரம் சிவரூபன் (மாணவன், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி)

விருட்சமாய் நிழல்தந்து வாழ்ந்து மறைந்து
இருபத்துமூன் றாண்டுகள் உருண்டு முடிந்தும்
உருக்கமுடன் நாமின்று உங்களை நினைத்து
பொறுமையாய் புனிதமாய் பூசித்துத் துதிக்கின்றோம்.

ஓட்டுமடம், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.